விலை ரூபா: 7.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஐப்பசி 16 | திங்கட்கிழமை | (1.11.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 318

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் சிறந்தது
முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு

# அரசு, பிளவுபடும் அபாய நிலையில்!

## ஜே.வி.பி. - சுதந்திரக்கட்சி மோதல் தொடர்கிறது

(நமது நிருபர்)

**சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகள் முற்றிய நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு பிளவுறும் அபாய நிலை தோன்றியுள்ளது. இதனால் இன்னொரு பாராளுமன்றப் பொதுத் தேர்தல் வெகுவிரைவில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

கடந்த பொதுத் தேர்தலில் அதிக வாக்குகளை பெற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஜே.வி.பியும் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு என்ற பெயரில் ஆட்சியமைத்தது.

ஆட்சி அமைத்து ஆறு மாதங்கள் முடிவுற்ற நிலையில் கூட்டுக் கட்சிக்குள் உள்முறுகல் ஏற்பட்டு அரசு தடுமாறும்நிலை ஏற்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் படைத்த ஜனாதிபதி அரசை செயற்படுத்தமுடியாமல் திணறுகின்றார்.

ஓய்வுபெற்ற பொலிஸ்காரர் தனது கடமையைச்செய்வது போல் ஜனாதிபதி காணப்படுகிறார் என ஜே.வி.பியின் பிரசார செயலர் விமல் வீரவன்ச இரத்தினபுரியில் ஆற்றிய உரையில் பகிரங்கமாகத் தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. காத்தான்குடியில் வன்முறை; முஸ்லிம் பள்ளிவாசல் தீக்கிரை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடியில் நேற்று பிற்பகல் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் பள்ளிவாசலொன்றும், இரண்டு மத்தரசாக்களும் சேதமாக்கப் பட்டு தீ வைக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்மக்களை பெரும்பான்மையாகக்கொண்ட இப்பிரதேசத்தில் இஸ்லாமிய மத கொள்கைகள் மற்றும் கோட்பாடுகள் தொடர்பான முரண்பாடுகளின் எதிரொலியாகவே இந்த வன்முறைகள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவையில் இருப்பவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒற்றர்கள்

### அமைச்சர் அனுர குமார திஸ்ஸநாயக்க ஜனாதிபதிக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்காவுக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் அரசாங்கத்தில் அங்கம்வகிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் நிலவிவரும் முறுகல்நிலை மேலும் தீவிரம் அடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜே.வி.பியின் அரசியல் சபை அண்மையில்கூடி தம்முடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களுக்கு மாறாக சிறிலங்கா சுதந்திரககட்சி தொடர்ந்தும் நடந்துகொள்ளுமானால் தாம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தனியாக ஒரு வேட்பாளரை நிறுத்தப் போவதாக ஜே.வி.பி.எச்சரித்துள்ளது.

அத்துடன் மாகாண சபைகளில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு வழங்கிவரும் ஆதரவினை விலக்கிக்கொள்ள எண்ணியுள்ளதாகவும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இதேவேளை ஜே.வி.பி கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களுள் ஒருவரான அனுரகுமார திஸ்ஸநாயக்க ஜனாதிபதிக்கு கடுமையான விமர்சனங்களுடன் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, ஜனாதிபதியின் அமைச்சரவையில் இருப்பவர்கள் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் ஒற்றர்களே என தெரி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ விடுதலைப் புலிகளின் அலுவலகம் டென்மார்க் பொலிஸாரினால் சோதனை

(கொழும்பு)

டென்மார்க்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் அலுவலகம் ஒன்று அந்நாட்டுப் பொலிஸாரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

டென்மார்க்கின் தலைநகரான கோபன்ஹாகனில் அமைந்துள்ள தமிழர் ஒருங்கிணைப்பு ஒன்றியம் என்ற அமைப்பை தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திவந்ததாகக் கூறப்படும் அலுவலகமே இவ்வாறு சோதனை செய்யப்பட்டது என்றும், இந்த அலுவலகத்திலிருந்து கணனிகள், சீடிக்கள் மற்றும் கணக்குப் புத்தகங்கள் உட்பட பல்வேறு முக்கிய ஆவணங்கள் பொலிஸாரால் எடுத்துச்செல்லப் பட்டதாகக் கூறப்படுகின்றது.

(12 அம் பக்கம் பார்க்க)

## ஈராக்கில் கடத்தப்பட்ட தனது கணவனை விடுதலை செய்யக்கோரி தீவிரவாதிகளிடம் மனைவி வேண்டுகோள்

(கொழும்பு)

ஈராக்கில் பணயம் வைக்கப் பட்டுள்ள இலங்கையரை விடுவிக்குமாறு அவரின் மனைவி ஈராக்கிய தீவிரவாதிகளுக்கு உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

மனைவியான ரூறியாறீற்றா தனது கணவர் தீவிரவாதிகளினால் கடத்தப்பட்டதை அறிந்து கொண்டபின் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

சாரதியான இலங்கையைச் சேர்ந்த தினேஷ் ராஜரட்னம் மற்றும் பங்களாதேஷ் சாரதி ஒருவரும் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டமை தெரிந்ததே.

கடத்தப்பட்டுள்ள சாரதியின் மனைவி கூறுகையில்,

2003ம் ஆண்டு யூன் மாதத்திலேயே வேலைவாய்ப்புக்காக எங்களை விட்டுவிட்டு குவைத் சென்றார். எங்கள் குடும்பத்தினர் வசிப்பதற்கு தேவையான வீடு ஒன்றை கட்டுவதற்கும் பிள்ளைகளை கஷ்டம் இல்லாமல் வளர்ப்பதற்காக அவர்களை ஒரு நல்ல நிலைககு கொண்டு வருவதற்காகவும எங்கள் எல்லோரையும்விட்டு விட்டு வெளி நாட்டுக்கு சென்றார்.

அவருக்கு எங்களை பிரிந்து செல்ல விருப்பமில்லை என்றாலும எங்கள் குடும்பநிலை காரணமாகவே அவர் வெளிநாடு சென்றார். கடத்தப்பட்ட பினனர்தான் அவர் முகவர் நிலையததால் ஈராக்குக்கு அனுப்பப்பட்டதாக அறிந்தோமென அவர் தெரிவித்தார். (ச-8)

## பிரதியமைச்சரின் அட்டகாசம்

(கொழும்பு)

புதிதாக நியமிக்கப்பட்ட பிரதியமைச்சர் மேவின் சில்வா தனது சகாக்களுடன் இணைந்து கொழும்பிலுள்ள பிரபல கிளப் ஒன்றினுள் புகுந்து அங்கு அடிதடியில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. நேற்று முன்தினமிரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. மேவின் சில்வாவின் மகன் மாலகவினை இக் கிளப்பினுள் ஆயுதங்களுடன் நுழைய அனுமதி மறுத்தமையினாலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாலக தனது கூட்டாளிகளுடன் ஆயுதங்களுடன் வெள்ளி இரவு கிளன்சி கிளப்பினுள் புக முற்பட்டுள்ளார். இதனைக் கிளப்பின் பாதுகாப்பு பிரிவினர் தடுத்துள்ளனர். இறுதியில் வாக்குவாதம் இடம்பெற்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் ஊடகத்துறைப் பொறுப்புக்கள் சேகு இஸ்ஸதீனிடம் ஒப்படைப்பு

தகவல் மற்றும் ஊடகத்துறை அமைசசிலுள்ள தமிழ் ஊடகத் துறையின் பொறுப்புக்களை பிரதியமைச்சர் சேகு இஸ்ஸதீனிடம் அமைச்சர் மங்கள சமரவீர கையளித்துள்ளார்.

மேற்படி தமிழ் ஊடகத்துறையின் பொறுப்புக்களை பிரதி அமைச்சர் சேகு இஸ்ஸதீனிடம் கையளிப்பது குறித்து அமைச்சர் மங்களசமரவீர எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

இதற்கமைவாக தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சின் கீழ் இயங்கும் அச்சு, இலத்திரனியல், ஊடகத் தமிழ்பிரிவு ஆகியவற்றின் செயற்பாடுகளைக் கண்காணித்தலும் மேற்பார்வை செய்தலும் மற்றும் தமிழ்ப் பத்திரிகை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழுவைச் சேர்ந்த ஆறுபேரின் தகவல்களை தருமாறு விடுதலைப் புலிகள் துண்டுப்பிரசுரம்

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து வெளியேறிய கருணா குழுவைச் சேர்ந்த 6 பேர் தொடர்பான தகவல்களை தந்துதவுமாறு விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறை பொதுமக்களைக் கேட்டுள்ளது.

இது தொடர்பாக இந்த 6 பேரின் புகைப்படங்களுடன் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டு பொது இடங்களிலும் ஒட்டப்பட்டுள்ளது. சின்னத்தம்பி, மார்க்கன், மங்களன், இனியபாரதி, உருத்திரா, பிள்ளையான் என்பவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

எம்முடன் சண்டையிட்டு வலுவிழந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இன்று ஒரு தகவல்

# செயற்கை இதயம்

"எங்கள் முதலாளி இருக்கிறாரே அவருக்கு மிகவும் நல்ல அன்பான இதயம்" என்று யாராவது சொன்னால் அதை இனிமேல் நம்பாதீர்கள். "உன் கண்ணில் கண்ணீர் வந்தால் என் நெஞ்சில இரத்தம் வரும்" என்று கூறுவது உண்டு. அன்பைத் தெரிவிப்பதற்காக அப்படியெல்லாம் சொல்லிக் கொள்ளலாம். அதில் ஒன்றும் தவறில்லை.

ஆனால்... அன்பான இதயம் என்று சொல்கின்றனரே அன்புக்கும் இதயத்திற்கும் சம்பந்தம் உண்டு என்று நினைக்கிறீர்களாக? 'ஆமாம்' என்று நினைக்கிறது நமது மனம்! அப்படி இல்லை என்று நிருபிக்கிறது விஞ்ஞானம். எப்படிததெரியுமா? டாக்டர் பார்ன்கிளார்க் என்று ஒருவா இருந்தார். உலகத்திலேயே முதன் முறையாக இவருக்குத் தான் செயற்கை இருதயம் பொருத்தினார்கள்.

நான் சொல்வது மாற்று இருதயம் இல்லை யெற்கை இருதயம். மாற்று இருதயம் இன்னொரு உடலில் இருக்கிற இருதயத்தை எடுத்துப் பொருத்துவது. செயற்கை இருதயம் நாமாகத் தயாரிப்பது. இப்படி செயற்கை இருதயம் ஒன்றைத் தயார் செய்து டாக்டர் பார்ன் கிளார்க்கிற்குப் பொருத்தினாா கள். அதன் பின்பு கொஞ்ச நாட்கள் அவர் உயிருடன் இருந்தார்.

செயற்கை இருதயத்துடன் அவர் இருந்த போது அவருடைய மனைவிக்கு ஒரு சந்தேகம். இப்போது அவருக்கு இருப்பதோ செயற்கை இருதயம். அதனால் அவர் தன்னிடம் காட்டும் அன்பும் செயற்கையாக இருக்குமோ என்று அவருக்கு சந்தேகம். இயற்கையான இருதயத்துடன் அந்த டாக்டர் இருந்த போது இருதயத்தில் உன்னை வைத்திருக்கிறேன். அப்படி... இப்படி... என்று சொல்லி இருப்பாரல்லவா? அந்த இருதயத்தை தூக்கியெறிந்து விட்டு செயற்கை இருதயம் பொருதடதி விட்டார்களே. இப்போது நமது கதி என்ன? இப்படி எல்லரம் அவரது மனைவி நினைப்பதில் தவறில்லை. இந்த சந்தேகத்தை நேரடியாகவே அவரிடம் கேட்டுவிட்டார். அதற்கு அவர் என்ன சொன்னார் தெரியுமா? அவர் புன்முறுவலுடன பதில் சொன்னாராம். இந்த செயற்கை இருதயத்தால் தனது அன்பில் எந்தவிதமான மாற்றமும் கிடையாது' என்று சொன்னராம்.

ஆக அன்பு என்பது இருதயத்திற்கு அப்பாற்பட்ட விஷயம் என்பது புரிகிறது. இப்போது ஒருவருக்கு இருதயததில் ஒரு வால்வ் சரியாக வேலை செய்யவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். அதற்காக அவர் காட்டும் அன்பிலும் கொஞ்சம் குறைத்துக் கொள்ளவா செய்வார்?

அது சரி... இந்த செயற்கை இருதயம் எந்த ஊரில பொருத்தினார்கள் தெரியுமா? அமெரிக்காவில் "சால்ட் லேக் சிட்டி" மருத்துவ மனையில் இந்த சத்திரசிகிச்சை நடைபெற்றது. பொலித்தீன், அலுமினியம் இது போன்ற பொருட்களைக் கொணடு செயற்கை இருதயத்தைத் தயாரித்திருக்கிறார்கள். அப்படி அதைத் தயாரித்தவரின் பெயர் டாக்டர் கே.எஸ். ஜார்விக். அவரது பெயரையே அந்த செயற்கை இருதயத்திற்கும் வைத்திருக்கிறார்கள்.

இந்த செயற்கை இருதயம் எல்லோருக்கும் பயன்பட இன்னும் சில காலமாகும். இதில் சில குறைபாடுகள் இருப்பதாக பல மருத்துவர்கள் கூறுகின்றனர். இவற்றை நிவிர்த்தி செய்து எல்லோருக்கும் பயன்படக்கூடியது போல் செய்யவேண்டும்.

அது இருக்கட்டும்... அன்பு என்பது இருதயத்தில் இல்லை என்று தெரிந்து விட்டது. அப்படி யென்றால் அதுவேறு எங்கே இருக்கிறது? மூளையில் இருக்குமோ? மூளையையும் செயற்கையாக தயாாிக்க முடிந்தால் அதையும் கண்டு பிடித்து விடலாம். செயற்கை இருதயத்தை அலுமினியத்தால் செய்திருக்கிறார்கள்... சரி ! செயற்கை மூளையை எதிலிருந்து தயாரிப்பார்கள்? அதற்கு இனிமேல் தான் ஒரு மூலப்பொருளைக் கண்டு பிடிக்க வேண்டும்? அதற்கு எங்கே போவது?

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஆட்சியைக் கைப்பற்றுவதில் உள்ள தீவிரம் சமாதான முயற்சிகளை ஆரம்பிப்பதில் இல்லை

## இதுவே தென்னிலங்கை பிரதான அரசியல் கட்சிகளின் நிலையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதிலுள்ள தீவிரம் இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும் என்பதில் அரசாங்கத்திற்கு இல்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.**

தற்போதுள்ள அரசியல் அமைப்பினை மாற்றி நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கவேண்டும் என்பதில் அரசாங்கமும் ஜனாதிபதி தேர்தலை நடாத்தி அதிகாரத்தைக் கைப்பற்றவேண்டும் என்பதில் ஐக்கிய தேசியக் கட்சியும் கவனம் செலுத்தி வருகின்றன. இவை சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எதனையும் முன்னெடுப்பதாகத் தெரியவில்லையெனவும் கூட்டமைப்புக் குற்றம் சாட்டியுள்ளது. இது தொடர்பில் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்ன்ம்பலம், ஜோசப் பரராஜசிங்கம் மற்றும் கூட்டமைப்பின் கொறடாவும் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் ஊடக மொனறுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைத தெரிவித்தனர்.

இது தொடர்பில் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்கருத்துத் தெரிவிக்கையில்,



தென்பகுதியிலுள்ள இரு பிரதான அரசியல் கட்சிகளுக்குமிடையில் ஆட்சியைக் கைப்பற்றுவதில் கடுமையான போட்டி நிலவி வருகின்றது.

இதன் காரணத்தால் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகள் பின் தள்ளப்பட்டு வருகின்றன.

ஆட்சிக்கு மாறி மாறி வரும் பிரதான அரசியல் கட்சிகள் அதிகாரத்தைக் கைப்பற்றும் போட்டியில் ஈடுபடுவதற்குத் தற்போதைய போர் நிறுத்த உடன்படிக்கை வசதியாக அமைந்துள்ளது.

அமைதியான சூழ்நிலையைப் பயன்படுத்தி சர்வதேச சமூகத்தின் நிதி உதவிகளைப் பெற்று தென்பகுதியை அபிவிருததி செய்வதிலும், வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிப்பதிலுமே தீவிர கவனம் செலுத்தப்படுகின்றது.

அத்துடன், இந்த அமைதியான சூழ்நிலையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, தமது கட்சி நடவடிக்கைகளை விஸ்தரித்து தங்களை எவ்வாறு பலப்படுத்தலாம் என்பதிலும் பிரதான அரசியல் கட்சிகளான ஐக்கிய மக்கள் சுகந்திரக் கூட்டமைப்பும், ஐக்கிய தேசியக் கட்சியும் மும்முரமாகக் கவனம் செலுத்தி வருகின்றன.

ஆனால், வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் இதுவரை எந்தவிதமான நன்மையையும் கண்டதில்லை. அவற்றை அனுபவிக்கவுமில்லை. சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதில் தாமதமடைந்தாலும் இடம் பெயர்ந்த மக்களைத் தத்தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவதில் கூட எந்தவிதமான உருப்படியான நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை எனக் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில்,



ஐக்கிய தேசியக் கட்சியினால் விடுதலைப் புலிகளுடன் செய்துகொள்ளப்பட்ட போர் நிறுத்த புரிந்துணர்வு உடன்படிககை தொடர்ச்சியாக அமுலிலிருக்க வேண்டும் என்பதிலேயே அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

இதே விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும் அவதானமாகவே செயற்பட்டு வருகின்றது.

ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்து இனப பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்பதில் அவர்களுக்கு எதுவித அக்கறையும் இருப்பதாகத் தெரியவில்லை.

போர் நிறுத்தச் சூழலைச் சாதகமாக்கி அரசியல் அதிகாரங்களைக் கைப்பற்றி எவர் பலமான அரசாங்கத்தை அமைபபது என்பதிலேயே தான் ஜனாதிபதியும், ரணில் விக்கிரம சிங்கவும் போட்டா போட்டி போடுகின்றனர்.

போர் நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை செய்யப்பட்ட காலப்பகுதியிலிருந்து இன்றுவரை தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் கூட சரியான முறையில் தீர்க்கப்படவில்லையெனச் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அங்கு கருத்து வெளியிடுகையில்,



தற்போது உள்ள சமாதானச் சூழநிலையில் ஆளும் ஐக் கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்துக்குள் பல்வேறு முரண்பாடுகள் எழுந்துள்ளன.

அரசாங்கத்தைக் கொண்டு நடாததுவதில் பிரிவினை வாதக் கடசியான மக்கள் விடுதலை முன்னணிக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் இடையில் பல விதமான கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றன.

மறுபுறத்தில் அரசாங்கத்தில் இத்தகைய பலவீனங்களைப் பயன்படுத்தி அதிகாரத்தை கைப்பற்றி விடவேண்டுமென்பதில் ஐக்கிய தேசியக் கட்சி தீவிர கவனம் செலுத்தி வருகின்றது.

இந்நிலையில், சமாதானப் பேச்சுவார்த்தைக்கான முயற்சிகள் புறம் தள்ளப்பட்டுள்ளன. இது குறித்துப் பிரதான அரசியல் கட்சிகளுக்கு எள்ளளவேனும் அக்கறையோ, ஆர்வமோ இல்லையெனத் தெரிவித்தார். (ரு-121)

# இராசிபலன்

**01.11.2004**

**(ஐப்பசி 16, திங்கட்கிழமை)**

**சதுர்த்தி பிற்பகல் 02.15 மணிவரை**

**மிருகசீரிடம் பி.ப 09.23 மணிவரை**

**இராகுகாலம் 7.34- 09.04 மணிவரை**

**சுபநேரம் 12.04 - 01.34 மணிவரை**

**கௌரிவிரதம் 10 ஆம் நாள்**

**மேடம்** *தொழில்கஷ்டம், எதிர்பாராதசெலவு, பித்த ரோகம், அமைதிக்குறைவு.*

**இடபம்** *எதிர்பாராத நன்மை, நண்பர்கள் சந்திப்பு, சயனசுகம், பெரியோர் ஆதரவு.*

**மிதுனம்** *காரியதாமதம், தொழில் மந்தநிலை, மனக்கிலேசம், அதிக செலவு.*

**கடகம்** *தனலாபம், செய்தொழில் விருத்தி, காரிய சித்தி, நண்பர் உதவி.*

**சிங்கம்** *அதிகாரம், தடைப்பட்ட காரியம் கைகூடும், தூரதேசச்செய்தி, தொழில்நன்மை*

**கன்னி** *பிரயாண கஷ்டம், சத்துரு பயம், முயற்சி தாமதம், ரோக பயம்.*

**துலாம்** *வீண் கலகம், கௌரவக்குறைவு, காரிய தாமதம், பிரயாண பயம்.*

**விருச்சிகம்** *எடுத்த கருமங்கள் கைகூடும், வருமானம், விருத்தி, புகழ்.*

**தனுசு** *தேகநலன், மனமகிழ்ச்சி, காரிய சித்தி, சத்துருபயம்.*

**மகரம்** *சிறுவியாதி, நண்பர்கள் விரோதம், வியாபார நன்மை, முயற்சி தாமதம்.*

**கும்பம்** *நண்பர்கள் சந்திப்பு, மனக்கிலேசம், உடல்நலக்குறைவு, முயற்சி தாமதம்.*

**மீனம்** *பிரயாண நன்மை, அந்நியர் சந்திப்பு, தொழில்நன்மை, சகோதரர் உதவி.*

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**

*வளவன்*

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் இடம்பெயர்ந்த தமிழ் அகதிகள்

(திருகோணமலை)

திருகோணமலை உப்பாறு கிராமத்தில் இருந்து இடம் பெயர்ந்து கிண்ணியாப் பகுதியில் தங்கியிருக்கும் தமிழ் அகதிகள் தமக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் அங்கு விஜயம் செய்தபோதே அவரிடம் இந்தக் கோரிக்கைகளை அவர்கள் விடுத்துள்ளனர்.

இந்த அகதிமுகாமில் 43 தமிழ்க் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. பல குடும்பங்களின் ஓலைக்குடிசைகள் இடிந்து விழும நிலையில் உள்ளன. தற்போது பெய்து வரும் மழை காரணமாக வீடுகள் பாதிப்படைந்துள்ளதுடன், வீட்டினுள் ஒழுக்கு ஏற்படுவதினால் பெரும் சிரமங்களையும் எதிர்கொள்ள வேண்டியதாக இந்த மக்கள் பாராளுமன்ற உறுப்பினரிடம் விபரித்துள்ளனர்.

இவர்களின் பிள்ளைகளுக்கென அமைக்கப்பட்ட ஓலையால் வேயப்பட்ட பாலர் பாடசாலையொன்றும் சிதைந்த நிலையிலேயே காணப்படுகின்றது. இதனால் இங்கு கல்விபயிலும் பிள்ளைகள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

இந் நிலை தொடர்ந்தும் நீடித்தால் நோய்கள் பரவும் அபாயமும் இருப்பதாக இந்த மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.(ரு-10)

# எமது விடுதலைப் போரை சிதைத்து விடலாம் என அரசு பகல் கனவு காண்கிறது

## தளபதி ரமணன் தெரிவிப்பு

அரசாங்கம் எமது போராட்டத்தை சிதைத்து ஒடுக்கி விடலாம் என பகற்கனவு காண்கிறது. இந்தக் கனவு அவர்களையே ஆபத்தில் வீழ்த்திவிடும்.

இவ்வாறு தளபதி ரமணன் தெரிவித்துள்ளார். திருப்பழுகாமம் விபுலானந்தா சிறுவர் இல்ல புதிய கட்டடத் திறப்பு விழா நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தளபதி ரமணன் மேலும் கருத்துக் கூறுகையில்:- தேசியத் தலைவர் அவர்கள் சமாதானப் பேச்சுக்கள் மூலம் தீர்வை பெறவேண்டும் என்பதில் உறுதியாகவிருக்கிறார்.

தமிழ் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் தற்போது ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று எமது மக்களின் நிலை, அவர்கள் அனுபவித்த துன்பங்கள் பற்றி அங்குள்ள அரசியல் பிரமுகர்கள், உயர் அதிகாரிகளைச் சந்தித்து விளக்கமளித்து வருகின்றனர்.

ஆனால் இலங்கை அரசு முட்டாள் தனமான நடவடிக்கைகள் மூலம் எமது விடுதலைப் போராட்டத்தை சிதைத்து விடலாம், தேசியத்தை ஒடுக்கிவிடலாம் எனப் பகற்கனவு காண்கிறது. இந்த முடிவு அவர்களை ஆபத்தில் வீழ்த்திவிடும்.

இராணுவமும், சிங்களப் பேரினவாத சக்திகளும் எமது உரிமைகளைத் தரப்போவதில்லை என்பதை எங்களுடைய தேசியத் தலைவர் நன்கு அவதானித்து தமிழ் மக்களின் உரிமைகளை ஆயுதப் போராட்டத்தின் மூலமாகத்தான் பெறமுடியும் என்றநோக்கோடு விடுதலைப் பயணத்தை ஆரம்பித்தார்.

இன்று தமிழ் மக்களின் விடுதலையை வென்றெடுப்பதில் ஓர் தேசியத் தலைவனாக எமது தலைவர் வளர்ந்திருகிறார் என அவர் மேலும் தெரிவித்தார். (க-121)

## ஊடகங்கள் அனைத்தும் பொறுப்புடன் செயற்பட வேண்டியது அவசியம்

சில ஊடகங்கள் தகவல்களை வெளியிடுவதில் பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்வதனால் மக்கள் மத்தியில் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை குறைந்துள்ளது என ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் அவர்களது பொறுப்புக்கள் குறித்து நன்கு புரிந்து கொள்ளாதது இதற்குப் பிரதான காரணமாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாத்தறையில் நடைபெற்ற ஊடகவியலாளருக்கான கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஊடகங்கள் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டினால் அரசாங்கம் அபிவிருத்தித் திட்டங்களில் காணப்படும் தவறுகளைச் சரியான முறையில் திருத்தி கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-121)

## குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் செயற்பாடுகளை விஸ்தரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் நடவடிக்கைகளை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதன் முதற் கட்டமாக குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் அலுவலகமொன்றை தென் பகுதியில் நிறுவுமாறு திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சரொருவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்த அலுவலகத்தை மாதறையில் அமைப்பதற்கு ஆலோசித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள அதேவேளை, இந்தத் திட்டம் வெற்றியளித்தால் நாட்டில் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்கள் சிலவற்றில் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் அலுவலகங்கள் திறக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தூர பிரதேச மக்களின் வசதி கருதியும் தரகர்களின் பிடியிலிருந்து மக்களைப் பாதுகாக்கவும் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (ற-8)

## யுனிசெவ் உதவியுடன் குழநீர் வசதிகள்

யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களைச் சேர்ந்த 72 பாடசாலைகளுக்கு குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

இந்தவகையில் யாழ்ப்பாண கல்வி வலயத்தில் 14 பாடசாலைகளுக்கும், வடமராட்சி வலயத்தில் 15 பாடசாலைகளுக்கும், தென்மராட்சி வலயத்தில் 15 பாடசாலைகளுக்கும், வலிகாமம் வலயத்தில் 15 பாடசாலைகளுக்கும், தீவகத்தில் 13 பாடசாலைகளுக்கும் நிரந்தர குடிநீர் தாங்கிகள் அமைக்கப்படவுள்ளன.

இத்திட்டத்திற்கென யுனிசெவ் நிறுவனம் 10 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-16)

## அமைச்சுப் பதவிகளை பெற்ற மூவருக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் கங்கிரஸ்



கட்சியைச் சோந்த மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சுப் பதவிகளை பெற்றமைக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்ட 3 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எதிராக முஸ்லிம் காங்கிரஸ் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் எனவும் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை பிளவுபடுத்துவதற்காகவே அரசாங்கம் தமது கட்சியில் இருந்தவர்களை இணைத்து அமைச்சுப் பதவிகளை வழங்கியதாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

இதேவேளை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் இருந்து அரசுடன் இணைந்துகொண்ட எஸ். அமீர்சுலி, நஜீப்எ.மஜீத, ரிசாத் பதியுதீன் ஆகிய 3 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் நேற்று முன்தினம் அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டது தெரிந்ததே.

மட்டக்களப்பு மாவட்டம், வணி மாவட்டம், திருகோணமலை மாவட்டம் ஆகிய மாவட்டங்களுக்கு அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு அமைச்சர்களாக இம்மூவரும் நியமிக்கப்பட்டுள்ளனர். (க-60,121)

## வடமராட்சி கிழக்கில் கடல் நீர்உட்புகும் அபாயம்

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் பெருமளவில் மணல் அகழப்படுவதால் இப்பகுதிகளுக்குள் கடல் நீர் உட்புகும் அபாயம் தோன்றியுள்ளது.

மேற்படி பகுதியில் பல்வேறு இடங்களிலும் மணல் அகழப்பட்டுள்ளதால், தற்போது அவ்விடங்களில் நீர் தேங்கிக்காணப்படுகின்றது. அத்துடன், இதனால் விவசாய நிலங்களும் உவர் நிலமாக மாறும் அபாயமும் தோன்றியுள்ளது.

யாழ் குடாநாட்டில் மணல் தேவை அனைத்தும் இப்பகுதிகளில் இருந்தே பூரணமாக்கப் படுவதால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டும் அப்பகுதி மக்கள் இது குறித்து சம்பந்தப்பட்டோர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர். (ற-43)

## திருகோணமலையை சுற்றுலாத்துறை நகரமாக்கத் துரிதநடவடிக்கை

(திருகோணமலை)

திருகோணமலையை சுற்றுலாத் துறை நகரமாக்கும் திட்டமொன்றினை அமைச்சர் அனுரபண்டாரநாயக்க அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளார்.

இது தொடர்பாக ஆராய்வதற்காக அமைச்சரவை உப குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் அமைச்சர்கள் லஷ்மன் கதிர்காமர், அனுரபண்டாரநாயக்க, மங்களசமரவீர, கலாநிதி சரத் அமுனுகம, தினேஷ் குணவர்த்தன, திருமதி. பேரியல் அஷ்ரப், ஏ.எல்.எம். அதாவுல்லா, திஸ்ஸ விதாரண ஆகியோர் அடங்குகின்றனர்.

திருகோணமலையை சுற்றுலாத்துறை நகரமாக அபிவிருத்தி செய்வது தொடர்பாக இந்தக்குழு ஆராய்ந்து இரண்டு மாதகாலத்திற்குள் அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்கும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். (க-110)

## பாம்புகளின் படையெடுப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு வாவியில் நேற்று முன்தினம் மாலை திடீரெனப் படையெடுத்த ஆயிரக்கணக்கான பாம்புகளினால் சுமார் மூன்று மணி நேரம் அப்பிரதேசத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

கல்லடிப்பாலத்தின் வாவியிலேயே நேற்று முன்தினம் மாலை 7.00 மணியளவில் ஆயிரக் கணக்கான பாம்புகள் தென்பட்டன. வாவியில் நீர் தெரியாத அளவுக்குப் பாம்புகள் நீரின் மேற்பகுதியில் பரவிக் காணப்பட்டன.

இதனைக் கண்ணுற்ற பொது மக்கள் பொலிசாருக்குக் கொடுத்த தகவலை அடுத்து அங்கு விரைந்த மட்டக்களப்பு மாவட்ட தலைமை அலுவலக பொலிஸ் அத்தியட்சகர் ஹரிச்சந்திர பண்டார இவ் அதிசயத்தை ஊடகவியலாளர்களை அழைத்து காண்பித்தார்.

இரவு 10.00 மணியாகியும் பாம்புகள் நீரின் மேல் நீந்திய வண்ணமே இருந்தன. இதனைப் பெரும் அளவான மக்கள் பார்வையிட்டனர். (ற-8)

## சர்வதேச நிதிநிறுவனப் பிரதிநிதிகளுடன் யசூசி அகாசி பேச்சு நடாத்தவுள்ளார்

(கொழும்பு)

ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாசி இலங்கைககு உதவி வழங்கும் பிரதான நாடுகள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களின் தூதுவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாததவுள்ளார்.

இலங்கைக்கான ஐந்து நாள் விஜயத்தை மேற்கொண்டு கடந்த புதனகிழமை கொழும்புவந்த யசூசி அகாசி பல அரசியல்கட்சித் தலைவர்களுடனும் சந்திப்புக்களை நடாத்தினார்.

இதன் ஒரு கட்டமாக இலங்கைக்கு உதவி வழங்கும் பிரதான நாடுகளின் தூதுவர்களையும் சர்வதேச நிதிநிறுவனங்களின் பிரதிநிதிகளையும் இவர் இன்று திங்கட்கிழமை பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார்.

இலங்கையின் சமாதான முயற்சிகளின் முன்னேற்றத்தின் அடிப்படையிலேயே இலங்கைக்கு நிதி உதவி வழங்கபபடும் என அறிவிக்கப்பட்டதால் தற்போதைய சமாதான முயற்சிகள் குறித்து யசூசி அகாசி இவர்களுக்கு விரிவாக விளக்கமளிக்கவுள்ளார்.

அத்துடன், இலங்கைக்கான விஜயத்தை முடித்துக்கொண்டு ஜப்பான் திரும்பும் வழியில் யசூசி அகாசி இந்தியாவிற்குச் சென்று இலங்கையில் தான் மேற்கொண்ட சந்திப்புக்கள் தொடர்பாக இந்தியத் தலைவர்களுக்கு விளக்கமளிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ற-121)

## இந்திய இராணுவத் தளபதி இன்று இலங்கை வருகை

(கொழும்பு)

இலங்கைக்கான உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இந்திய இராணுவத்தளபதி லெப்ரினன் ஜெனரல் வின்ஸிவிச் இன்று திங்கட்கிழமை இங்கு வரவுள்ளார்.

இவர் கொழும்பில் தங்கியிருக்கும் தருணத்தில் முப்படைத்தளபதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளார்.

அத்துடன, பல இராணுவ முகாம்களுக்கும் இவர் விஜயம் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், கைச்சாத்திடப்படவுள்ள இலங்கை-இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்தும் இவர் அரச அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார். (ற-121)

## குழு நியமனம்

(சங்கானை)

மாவீரர் தினத்தையொட்டி சங்கானை கோட்ட பொது அமைப்புகளுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று அண்மையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் மாவீரர் தினத்தை சிறப்பாக நடாத்துவதற்காக 15பேர் அங்கம் வகிக்கும் மாவீரர்தின ஏற்பாட்டுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. (ப-20)

## "கடமைக்குப் பின்பே உரிமை"

## அரசாங்க ஊழியர்களுக்கு பிரதமர் மஹிந்த அறிவுறுத்து

(கொழும்பு)

நாடடில் அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவினைக் கட்டுபபடுத்தும் முகமாக ஆளும் கூட்டமைப்பு அரசாங்கம் பல திட்டங்களைத் தயாரித்து வருகின்றது.

இதன் ஒரு நடவடிக்கையாக எதிர்வரும் நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள அரசாங்கத்தின் முதலாவது வரவு-செலவுத்திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்குச் சிறந்த முறையில் சம்பள உயர்வு வழங்கப்படுமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கை குடியரசு சுகாதார சேவைகள் சங்கத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வுத் திட்டத்தின் கீழ் ஏற்படக்கூடிய சம்பள முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளைச் சிபாரிசு செய்யுமாறு திஸ்ஸ தெய்வேந்திர சட்டமா ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



அரசாங்க ஊழியர்கள் அவர்களது கடமைகளையும், பொறுப்புக்களையும் நிறைவேற்றிய பின்னரே, உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான கோரிக்கைகளை முன்வைக்க முடியும்.

இதனை அனைத்துத் தரப்பிலுள்ள அரசாங்க ஊழியர்களும் கவனத்தில் கொள்ள வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்தார். (ற-121)

இலங்கைக்கு எதிரான கராச்சி கிரிக்கெற்

# பாகிஸ்தான் அணி வலுவான நிலையில்
# ஜெயசூரிய டெஸ்டில் அதிக ஓட்டங்கள்

இலங்கை அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம்



பெறற செஞ்சுரி காரணமாக அந்த அணி வலுவான நிலையில் உள்ளது.

கடந்த வியாழனன்று பாகிஸ்தான் கராசசி மைதானத்தில் ஆரம்பமான போட்டியில் இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸில் 208 ஓட்டங்களைப் பெற்றது.

பாகிஸ்தான் தனது முதலாவது இன்னிங்ஸில், இரண்டாம் நாள் ஆட்ட முடிவில், 4 விக்கெற்றுக்களை இழந்து 298 ஓட்டங்களை எடுத்திருந்தது. இதில் பாகிஸ்தான் அணித் தலைவர் இன்சமாம் ஆட்டமிழக்காது 79 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், யூசுப் யுகானாவுடன் மூன்றாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்தார்.

பாகிஸ்தான் அணி மொத்தம் 374 ஆக இருந்தபோது, யூசுப் யுகானா 5 பவுண்டரி 2 சிக்ஸர் உட்பட 46 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், டில்ஹார பெர்னாண்டோவின் பந்து வீச்சில் சங்ககாரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து இன்சமாமுடன் சொகைப மாலிக இணைந்து கொண்டார். இந்நிலையில் இன்சமாம் தனது 20 ஆவது டெஸ்ட் செஞ்சுரியைப் பெற்றுக்கொண்டார். 1 சிக்ஸர் 10 பவுணடரிகள் உட்பட 117 ஓட்டங்களைட் பெற்ற நிலையில் சமிந்த வாஸின் பந்து வீச்சில் மஹிலவிடம் பிடிகொடுத்து அவர் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து சொகைப் மாலிக்-44, அப்துல் ரஸாக்-16, கம்ரன் அக்மல்-15, நவீட்-உல்-ஹசன்-11,



டினேஷ் கனேரியா ஆட்டமிழக்காது 5 ஓட்டங்களைப் பெறறனர். உதிரிகளாக 16 ஓட்டங்கள் கிடைத்தன. இறுதியில் பாகிஸ்தான் அணி சகல விக்கெற்றுக்களையும் இழந்து 478 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் வாஸ், டில்ஹார தலா 3விக்கெற்றுக்களையும், ஹேரத் 2 விக்கெற்றுக்களையும், மஹ்ரூப், ஜெயசூரிய தலா 1 விக்கெற்றையும் வீழ்த்தினர்.

இலங்கை அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில், மூன்றாம் நாள் ஆட்ட முடிவில், ஒரு விக்கெற்றை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆரம்பத்தில் களமிறங்கிய ஜெயசூரியவும் அத்தபபத்துவும் மிகவும் சிறப்பாக அடித்தாடி ஓட்ங்களைக் குவித்தனர். அணி 117 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை அத்தப்பத்து 25 ஓட்டங்களுடன் டினேஷ் கனேரியாவின் பந்துவீச்சில் யசீர் ஹமிட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

சங்ககார ஜெயசூரியவுடன்இணைந்து ஆட்டநேர முடிவில் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தார். சனத் ஜெயசூரிய 1 சிக்ஸர் 14 பவுண்டரிகள் உட்பட 96 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தாா. நேற்று அவர் தனது 14ஆவது செஞ்சுரியைப்பெற்று 107 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

சனத் ஜெயசூரிய இவ் ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் இலங்கை அணி சார்பில் டெஸ்ட் போட்டிகளில் ஆகக் கூடுதலான ஓட்டங்களைப் பெற்றவர் என்ற சாதனையை எட்டியிருக்கிறார் அவர் 6388 டெஸ்ட் ஓட்டங்களை எடுத்



திருக்கிறார். இதற்கு முன்னர் இலங்கை அணியின் முன்னாள் உப தலைவர் அரவிந்த டி சில்வா ஆகக் கூடுதலாக 6361 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். (7)

# உலக செஸ் ஒலிம்பியாட்
# சீனா மீண்டும் சம்பியன்

ஸ்பெயினில் உள்ள மல்லார்கா நகரில் நடந்து முடிந்த உலக செஸ்ஒலிம்பியாட் போட்டியில் பெண்கள் பிரிவில் தற்போதைய சம்பியனான சீனா தொடர்ந்தும் சம்பியன் பட்டத்தை வெற்றுள்ளது.

14 சுற்றுக்கள் கொண்ட இத் தொடரில் இந்தியப்பெண்கள் அணி சீனாவை எதிர்த்து விளையாடியது. சீனா 2:1 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. இவ் வெற்றியின் மூலம் சீனா 29 புள்ளிகளைப் பெற்று தொடர்ந்து 2ஆவது முறையாக சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

25.5 புள்ளிகளைப் பெற்று அமொிக்கா, ரீஷ்யா ஆகிய நாடுகள் இரண்டாவது இடத்தையும், 25 புள்ளிகளைப் பெற்று ஜோர்ஜியா மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளன. 23.5 புள்ளிகளைப்பெற்ற இந்தியா 8 ஆவது இடத்தில் உள்ளது.

இதே வேளை ஆண்கள் பிரிவில் உக்ரைன் அணி 36.5 புள்ளிகளுடன் முதலிடத்திலும், தற்போதைய சம்பியனான ரஷ்யா 33.5 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும் உள்ளன. (7)

# மேற்கிந்திய புதிய பயிற்றுனராக
# அவுஸ்திரேலிய பேர்னாட் கிங்

மேறகிந்திய தீவுகள் கிரிக்கெற் பயிற்றுனராக அவுஸ்திரேலியாவின் பேர்னாட் கிங் நியமிக்கப்பட்டிருக்



கிறார்.

39வயதான முன்னைய பயிற்றுனரான ஹாஸ் லூயியின் ஒப்பந்த காலம் ஐ.சி.சி.சம்பியன் கிண்ணப் போட்டிகளுடன் முடிவு பெற்றதைத் தொடர்ந்தே அவர் இப் பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெற் அக்கடமியில் பணிபுரிந்த கிங், பயிற்றுனராகப் பணி புரிவதற்காக தனது முன்னைய பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

மேற்கிந்திய தீவுகளணியை திறமையான முறையில் முன்னேற்றுவதும், எல்லாத் துறைகளிலும் திறமைமிக்க அணியாக மாற்றுவதுமே தமது குறிக்கோள் எனவும் கிங் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடமே பயிற்றுநர் பதவி கிங்கிற்கு கிடைத்த போதும் அவுஸ்திரேலிய கிரிக்கெற் அக்கடமியுடனான பயிற்றுநர் ஒப்பந்தம் நிறைவு பெறாத காரணத்தாலேயே அவர் அப்போது அப்பதவியை ஏற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (7)



FIS மகளிர் உலகக் கிண்ண பணிச்சறுக்கல் போட்டியில் ஜப்பானிய போட்டியாளரான ஷோகோ ஜமோக்கா மூன்றாம் இடத்தைப்பெற்றார். இப் போட்டிகள் சுவிற்சர்லாந்தில் உள்ள ஷர்ஸ்-வீ நகரில் நடைபெற்றன்.


# விளையாட்டு செய்திகள்

# கப்ரின் குணசிங்கத்திற்கு "நடுநிலைச் செம்மல்" பட்டம்



உதைப்பந்தாட்டத் துறையில் கடந்த 50 வருடங்களாக கடமையாற்றிய உதைப்பந்தாட்ட மத்தியஸ்தர் கப்ரின் டி.ஏ.எம்.குணசிங்கத்தின் சேவைநலன் பாராட்டுவிழா, கடந்த 27 ஆம் திகதி வியாழக்கிழமை, யாழ். உதைபந்தாட்டச் சங்கப் பணிமனையில், யாழ். உதைபந்தாட்ட லீக், யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடைபெற்றது.

உதை பந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ். கிளிபேட் அன்ரனிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில, முதன்மை விருந்தினராக இளைஞர் பராமரிப்பு இயக்க இயக்குநர் வணபிதா சார்ள்ஸ் கொலின் அடிகளாரும், கௌரவ விருந்தினர்களாக, முன்னாள் வடகிழக்கு மாகாண விளையாட்டுத்துறை இயக்குநர் எஸ்.மரியதாஸ், முன்னாள் யாழ் மாவட்ட விளையாட்டுத்துறை இயக்குநர் கே.ஏகாம்பரம் ஆகியோரும கலநது கொணடனர். இவ்விழாவில் கப்ரின் டி.ஏ.எம்.குணசிங்கத்திற்கு 'நடுநிலைச் செம்மல்' என்ற கௌரவப பட்டம் வழங்கப்பட்டதுடன நினைவுச்சின்னமுமமுதன்மை விருந்தினரால் வழங்கப்பட்டது. (7-110)



டோக்கியோவில் நடந்த டபிள்யூ.பி.ஏ., குறைந்த பாரக் குத்துச் சண்டை போட்டியில், ஜப்பான் வீரர் யுடாகா நிடா(இடது) வெனிசுலா வீரர் ஜூவான் லான்டேட்டா விட்ட குத்தை சமாளிக்கிறார். இதில் 2-1 என்ற முறையில் நிடா வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார்.

# கொள்ளையரிடமிருந்து இம்ரான்
# தெய்வாதீனமாக உயிர் தப்பினார்

பாகிஸ்தான் கிரிக்கெற் அணியின முன்னாள் தலைவரும், பாகிஸ்தானுக்காக உலகக் கிண்ணத்தை பெற்றுக் கொடுத்தவருமான, தற்போது அரசியலில் ஈடுபட்டுள்ள இம்ரான்கான் கொள்ளையர்களிடமிருந்து தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமபாத்திற்கு 15 கி.மீ தூரத்திலுள்ள பண்ணை வீட்டிற்கு, தனது பிள்ளைகள், நண்பர்களுடன் இம்ரான்கான் சென்றுகொண்டிருந்தபோதே இப்பயங்கரச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

கடந்த வெள்ளிக்கிழமை இம்ரானே காரை செலுத்திக்கொண்டு சென்றபோது, அவரது காரைத் தொடர்ந்துவந்த மர்மவான் ஒன்று போக்குவரத்துக் குறைவான இடத்தில் முந்துச்சென்று வழிமறித்தது.

வேறு வழியின்றி இம்ரான் காரை நிறுத்திய போது, துப்பாக்கி உட்பட பயங்கர ஆயுதங்களுடன் கொள்ளையர்கள் அவரது காரைச் சூழ்ந்து கொண்டனர். அவரிடமுள்ள பணம், மற்றும் பெறுமதிமிக்க பொருட்களை ஒப்படைக்காவிட்டால் சுட்டுக்கொன்று விடப்போவதாக மிரட்டினார்கள். வேறு வழியின்றி எந்த மறுப்பும சொல்லாது இம்ரான் தன்னிடமிருந்த பணம, நகைகள், கிரெடிட கார்ட், செல்லிடத் தொலை பேசிகள் போன்ற அனைத்து பொருடகளையும் கொள்ளையரிடம் கொடுத்தார். அவற்றைப் பெற்றுக் கொண்டு மர்ம மனிதர்கள் தலைமறைவாகிவிட்டனர்.

அத்திடீர் சம்பவத்தால் அதிர்ச்சியடைந்த இம்ரான், இஸ்லாமபாத் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

கிரிக்கெற் உலகில் இன்றும் ஒரு கதாநாயகனாக மதிக்கப்படும் இம்ரானுக்கு, நடந்த இச்சம்பவம் பாகிஸ்தானில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக இம்ரான் கூறுகையில் 'பாதுகாப்பான இடத்திலேயே இச்சம்பவம் நடைபெற்றிருக்கிறது. எனக்கே இக் கதி என்றால் சாதாரண மக்களின் நிலை என்ன?' என்று வினா எழுப்பினார்.

குறித்த இப்பகுதியில் அண்மைக் காலமாக வழிப்பறிகளும்,



துப்பாக்கிச் சூடுகளும் அதிகளவில் இடம்பெறுகின்ற போதும் பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் அவர் கவலை தெரிவித்தார். (7)

# தமிழகத்தின் புதிய கவர்னராக பர்னாலா!

# இந்திய ஜனாதிபதி கலாம் அறிவிப்பு

## இவ்வார மத்தியில் பதவியேற்பு

(சென்னை)

தமிழகத்தின் புதிய கவர்னர் பர்னாலா என இந்திய ஜனாதிபதி டாக்டர் அப்துல கலாம் அறிவித்துள்ளார். இவர் எதிர்வரும 3ஆம் திகதிக்குப் பின்னர் பதவி ஏற்கவுள் ளார்.

மத்திய காங்கிரஸ் கூட்டணி ஆட்சிக்கு வந்ததுமே, சில மாநிலங்களின் கவர்னர் கள் மாற்றபபடுவார்கள் என்ற பேச்சு அடி பட்டது. பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சியில் நயமிக்கபபட்ட அந்தக் கவர்னர்களை நீக்கி விட்டு, புதிய கவர்னர்களை நியமிக்க மத் திய காங்கிரஸ் கூட்டணி அரசு முடிவுசெய தது. இதற்கான நடவடிக்கைகளை மத்திய உள்துறை அமைச்சா சிவராஜ் பட்டீல் மேற் கொண்டார்.

இதன்படி, தமிழக கவர்னர் ராமமோகன் ராவ் கடந்த வெள்ளிக்கிழமை தனது பத வியை இராஜினாமா செய்தார். அவரை வேறு ஒரு மாநிலத்துக்கு மாற்றுவதற் குத தான் முதலில் மத்திய அரசு பரிசீலனை செய்தது.

இதற்காக இருவாரங்களுக்கு முன்பு ராமமோகன்ராவை மத்திய அரசின் உள் துறை அமைச்சகம் தொடர்புகொண்டு கேட்டது. வடகிழக்கு மாநிலங்களில் ஒன றான அருணாச்சலப் பிரதேச மாநில கவர் னர் வி.சி.பாண்டேயின் பதவிக்காலம் அடுத்தமாத மத்தியில் முடிவடையப்போகி றது.

எனவே, அருணாச்சலப் பிரதேச மாநில புதிய கவர்னராகிறீகளா என தமிழக கவா னர் ராமமோகன்ராவிடம் கேட்கப்பட்டது. ஆனால் குடும்பச் சூழ்நிலை காரணமாக வடகிழக்கு மாநிலத்துககுச் செல்ல வரும்ப வில்லை என்று கவர்னர் ராமமோகன்ராவ தெரிவித்தார். அத்துடன் தமிழக கவர்னர் பதவியை முழுமையாக 5 ஆண்டுகள் நீடி க்க அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். ஆனால் மத்திய அரசு அதை ஏற்கவில்லை.

கவர்னர் ராம்மோகன்ராவின் மாற றத்தைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு முறை யிட்டது. ஆனால், இந்த விவகாரத்தில் தங் களால் தலையிட இயலாது என்று கூறி நீதிமன்றம் தடைவிதிக்க மறுத்துவிட்டது.

இந்தநிலையில் கடந்த வெள்ளிக் கிழமை கவர்னர் ராமமோகன்ராவ் திடீரென தனது பதவியை இராஜினாமாச் செய்தார். இராஜினாமாச் கடிதத்தை அவர் பக்ஸ் மூலம ஜனாதிபதி டாக்டர் அப்துல் கலா முக்கு அனுப்பிவைத்தார். நாளை கவர்னர் பொறுப்பிலிருந்து தான் விடுபடுவதாகத் தனது கடிதத்தில் ராமமோகன்ராவ் குறிப் பிட்டுள்ளார்.

இதனையடுத்து ராமமோகன்ராவுக்குப பதிலாகத் தமிழகப் புதிய கவர்னராக சுர் ஜித்சிங் பர்னாலாவை நியமிக்க மத்திய அரசு முடிவுசெய்தது. ஆந்திர மாநிலக் கவர் னராக இருந்த பர்னாலா தமிழ்நாட்டுக்கு வரச் சமமதம் தெரிவித்தார். அவரை மாற் றுவது ஆந்திர முதல்மந்திரி ராஜசேகர ரெட்டிக்கு அதிருப்தியை ஏற்படுத்தியது. இதை அறிந்ததும் பர்னாலா உடனே ராஜ சேகர ரெட்டியைச் சநதித்து சமரசம் செய்தாா.

இதையடுத்து பர்னாலா தமிழ்நாட்டுக் குக் கவர்னராக வருவது உறுதியானது. இதைத்தொடர்ந்து தமிழகக் கவர்னராகப் பர்னாலா நியமிக்கப்பட்டுள்ளதாக நேற்று முனதினம் மாலை ஜனாதிபதி டாக்டர் அப்துல் கலாம் அறிவித்தார். எதிர்வரும் 3ஆம் திகதிக்குப் பின்னர் தமிழகத்தின் புதிய கவர்னராகப் பர்னாலா பதவி ஏற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகக் கவர்னராகப் பர்னாலா இரண் டாவது தடவையாகப் பொறுப்பேற்க உள் ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்பு அவர் 1990, 1991ஆம் ஆண்டு காலப் பகுதியில் தி.மு.க. ஆட்சியினபோது கவர்ன ராக இருந்தார்.

தி.மு.க ஆட்சியைக் கலைக்க 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் திகதி மத்திய அரசு பர்னாலாவிடம் கடி தம் கேட்டது. ஆனால், அத்தகைய பரிந் துரைக்கடிதம் கொடுக்க பர்னாலா மறுத் தாா. ஆனாலும், அவர் ஒப்புதல் இல்லாம லேயே அப்போது தி.மு.க ஆட்சி கலைக் கபபட்டு ஜனாதிபதி ஆட்சி கொண்டு வரப்பட்டது.

பிறகு பர்னாலாவை பீகார் மாநிலக் கவர்னராக மத்திய அரசு மாற்றியது. இதை ஏற்காத பர்னாலா 1991ஆம் ஆண்டு பெப் ரவரி மாதம் 13அம் திகதி தமிழகக கவர்னா பதவியை இராஜினாமாச் செய்தார். அதே பர்னாலா இப்போது மீண்டும் தமிழக் துக்கே கவர்னராக வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ர)

# யஸீர் அரபாத்துக்கு இரத்தப் புற்றுநோய்?



(பிரான்ஸ்)
பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத்

தற்கு பரிஸில் இரத்தப் புற்றுநோய் மருத துவர்கள் நேற்று முன்தினம் பரிசோதனை நடத்தினர். இரத்தத்தில் அவருக்கு ஏதே னும் கோளாறு இருக்கிறதா என அவர் கள் பரிசோதித்தனர்.

யஸீர் அரபாத்துக்கு இரத்தப் புற்று நோய் ஏற்பட்டிருபபதாகத்தான் தெரிகிறது. அதைக் கண்டறியும் முயற்சியில்தான் மருத்துவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என பலஸ்தீன அதிகாரி ஒருவர் தெரிவத்தார்.

கடந்த இருவாரங்களாக அரபாத்தின் உடல்நலம் குன்றியுள்ளது. அவரது இரத் தப் பரிசோதனையில், புற்றுநோய்க்கான சாத்தியக்கூறுகள் தென்பட்டன. இதனால பிரான்ஸில் 5 வாரங்கள் தங்கியிருந்து வைத்தியப் பரிசோதனைகளை யஸீர் அர பாத மேற்கொள்ளவுள்ளதாகத தெரிவிக் கப்படுகிறது. (ர)

## உலக தரிசனம்

அமெரிக்க அதிபர் தேர்தலுக்கு இன்னும் ஒருநாளே உள்ள நிலை யில் தற்போதைய அதிபர் புஷ் மீண்டும் பதவியைப் பெற கடுமையான தேர் தல் பிரசாரத்தில் ஈடு பட்டு வருகிறார்.

ஓகியோ மாகாணத் தில் கொலம்பஸ் என் னும் இடத்தில் நேற்று முன்தினம் நடந்த பிர மாண்டப் பேரணியில் ஆத ரவாளர்கள் வாழ்த்து மழையில் நனையும் புஷ் - லாரா தம்பதி யினர்.



## நவாஸ் ஷெரீப்பின் தந்தை மரணம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் தந்தை மியான் முக மது ஷெரீப் சவூதி அரேபியாவில் மாரடைப் பால் மரணமடைந்துள்ளார்.

பாகிஸ்தானில் நடந்த ஆட்சிக்கவிழ்ப் பால் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப குடும்பத்துடன் நாடு கடத்தப்பட்டாா. தற் போது சவூதி அரேபியாவில் அவர் தஞ் சம் புகுந்துள்ளார்.

அங்கு அவரது தந்தை மியான் முக மது ஷெரீப்பிற்கு கடந்த வெள்ளிக் கிழமை மாரடைப்பு ஏற்பட்டது. உடனடி யாக மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்ட அவர், சிகிச்சையளித்தும் பல னின்றி அங்கு இறந்தார்.

அவரது சடலம் பாகிஸ்தானில் உள்ள லாகூர், ஜாட்டி உம்ரா, ராய்விண்ட் ஆகிய ஏதாவது ஒரு இடத்தில் அடக்கம் செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



சென்னையில் நடந்த அதிரடிப்படை விழாவில் 'ஆயிரத்தில் ஒருவன்' படத்தில் அதோ அந் தப் பறவை போல வாழவேண்டும் என்ற பாடலுக்கு நடனக் குழுவினர் அந்தரத்தில் பறந்து ஆடிய காட்சி.

# பிரபாகரனை ஒரு தடவையேனும் பார்க்கத் துடித்தார் வீரப்பன்

## கொளத்தூர்மணி பேட்டி

(சென்னை)

வீரப்பன் கொல்லப்பட்டது எப்படி என்று தினம் ஒரு புதுத் தகவல் வெளியா கிக்கொண்டிருக்கிறது. இலங்கையைச சேர்ந்தவராக நடித்த அதிரடிப்படை எஸ்.ஐ. வெள்ளைத்துரையை நம்பி விடுதலைப்புலி களைச் சந்திக்கச் சம்மதித்து வீரப்பன காட்டைவிட்டு வெளியேறினான் என்ற ரீதி யிலும் தகவல்கள் வந்துகொண்டிருக்கின் றன.

இவ்விடயம் குறித்து விடுதலைப்புலி களின் தலைவர் வே.பிரபாகரனின் நண்ப ரும், வீரப்பனைக் கண்டு அறிந்தவர்களில் ஒருவருமான தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஊட கம் ஒன்றுக்குப் பேட்டியளிக்கையில்,

இன்றைய சூழலில் விடுதலைப்புலி களுக்கு இந்திய அரசின் தார்மீக ஆதரவு நிச்சயம் தேவை. அப்படியிருக்க வீரப்பன் போன்றோரைத் தங்களது முகாமுக்கு அழைத்து இந்திய அரசின் விரோதத்தைத தேடிக்கொள்ள அவர்கள் விரும்பமாட்டார் கள். வீரபபனிடமிருந்து விடுதலைப்புலிகள புதிய போர் நுணுக்கங்களையா கற்றுக் கொள்ளப்போகிறார்கள்? அந்தத் தேவை அவர்களுக்கில்லை. வீரப்பனுக்கு வேண்டு மானால நவீன போர்க்கருவிகளும், அதில பயிற்சியும் தேவைபபட்டிருககலாம். ஆனால அதை வீரப்பனுக்கு வழங்க விடுதலைப் புலிகள் தயாரான நிலையில் இருந்ததாகத தெரியவில்லை.

உண்மை இப்படியிருக்க, விடுதலைப புலிகளுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொள் ளவே வீரப்பன் வெளியே வந்தார் என்று சொல்வது நம்பக்கூடியதாக இல்லை. ஆனால் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைத் தனது வாழ்நாளில் ஒரு முறையேனும் நேருக்கு நேர் சந்தித்துவிட வேண்டும் என்ற தணியாத ஆவல் வீரப பனுக்கு இருந்திருக்கிறது என்பதை அவரை அறிந்தவர்கள் கூற நான் கேட்டிருக்கிறேன்.

வீரப்பன் செய்தவற்றை நாங்கள் சரியென்று சொல்லவும் இல்லை. அதற்கு நியாயம் கற்பிக்கவும் இல்லை. ஒரு தனி மனிதன் எப்படி வேண்டுமானாலும் மனம போன போக்கில் நடந்துகொள்ளலாம். ஒரு அரசாங்கம அப்படி நடந்துகொள்ளக்கூடாது.

காவல்துறை என்பது அரசாங்கத் தின் ஒரு இயந்திரம். குற்றவாளிகளைப் பிடிப்பது மட்டுமே அதன் பணி. குற்றவாளி களை நீதிமன்றத்தின் முன் நிறுத்துவது டன், காவல்துறையின் பணி முடிந்துவிடு கிறது. நீதிமன்றங்களுக்கு மட்டுமே குற்ற வாளிகளுக்கான தண்டனையை வழங்கும உரிமை உண்டு. தமது தகுதியை மீறித் காவல்துறையினர் வீரப்பனுக்கு மரண தண டனையை தன்னிச்சையாக வழங்கியது மனிதவுரிமை மீறலாகும்.

எது எப்படியோ, வீரப்பன் தேடுதல் வேட்டையின்போது மலைவாழ் மக்கள் நிறையக் கொடுமைகளுக்கு உள்ளாக் கப்பட்டனர். அதிரடிப்படையின் விசார ணைக்காக அழைத்துச் செல்லப்பட்டவர்க ளில் நிறையப்பேர் என்னவானார்கள் என் பது தெளிவாகவில்லை. பெண்கள் பாலி யல் பலாத்காரங்களுக்கு உட்படுத்தப்பட்டி ருககிறார்கள்.

அதிரடிப்படையின் அத்துமீறல்கள் சதாசிவா கமிஷனின் விசாரணையில் தற் போது வெளிச்சத்துக்கு வந்துள்ளன. அதி ரடிப்படையால் பாதிக்கப்பட்ட மலைவாழ் மக்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டு மென்று முன்பிருந்தே நாங்கள் வலியுறுததி வருகிறோம். வீரப்பன் இறந்துவிட்டார் என் பதற்காக அவர்களுக்கான நிவாரணத் தைக் கிடப்பில் போட்டுவிடவேண்டாம் என் பதே எமது வேண்டுகோள் என்றார். (ர)

## கருவறையில் சிசு

கருவறையில் இருக்கும் சிசுவுக்கும்
காது கேட்குது!
புதிய உலகம் படைக்க
உத்வேகம் கொள்ளுது!
தனமானம் பெறத் தயாராகிக் கொள்ளுது!
தரணியில் தான் உதிக்கும்
தினத்தை எண்ணிக்கொள்ளுது!

பா.செல்வராணி,
வட்டுக்கோட்டை.

## அவதரிப்பும் பரிதவிப்பும்

போதுமடா அவதரிப்பு
நாடுபடும் பரிதவிப்பில்
ஐயிரண்டு மாதம் கருவறையல் - நீ
கண்ட சுதந்திரம்....
மனித உரிமை மறுக்கப்பட்ட
இப்புவிதனில் பிறந்திட்டால்
புதைத்திடுவான் நாசகாரன்
படுகுழியில்.....!

வி.கிரிதரன்,
மானிப்பாய்.

## தொடரட்டும்....

துவழாதே துணிந்து வா!
கருவறைக்குள் - மட்டுமல்ல
உனது போராட்டம்
கல்லறைவரை தொடரட்டும்!

A.S.கீத்தா, பருத்தித்துறை.

## மூழ்கடிக்கவா...?

சாதிமத பேதத்தால் சாக்கடையான
சமுதாயத்தில் மூழ்கடிக்கவா...?
கருவறை என்னும் இருட்டறையில்
உன் தாய் உன்னை கைதாக்கினாள்?

சாயினி, உடுவில்.

## வாழ்க்கை நாடகம்

ஆணும் பெண்ணுமெழுதிய
நாடக எழுத்துருவை
ஒத்திகை பார்க்கும்
கருப்பைக் களத்திலே
ஆற்றுகைப்படுத்தி
'வாழ்க்கை' எனும்
நாடக ஆற்றுகையை
உலகமேடையில்
அரங்கேற்றுவதற்காக
குழந்தை பிறக்கிறது பூமியிலே
தாய் நெறியாளர்
அதை நெறிப்படுத்த
சமூகப் பார்வையாளர்கள்
விமர்சித்துக்கொண்டிருக்
கிறார்கள்.

ஜெ.சுபாஷினி.

# மௌனத்தின்



# தேடல்கள் -33

## உறங்குவதேன்?

உனக்காக உலகம்
ஒன்று காத்திருக்க...
உள்ளுக்குள்ளே
ஊமையாய் - நீ
உறங்குவதேன்...?

A.கீர்த்தனா,
தும்பளை.

## இவனுக்கு வேண்டாம்!

ஈரைந்து திங்கள் இவனிருக்குமிடம்!
இணைந்த வாழ்வின்
இல்லவிளக்கின் நல்வரவொன்று!
நலமாக இவன் பிறக்க ~ நாம்
பிரார்த்திப்பது நல்லிறையருளை!
இனமொழிபேதம்
இவனுக்கு வேண்டாம்!

மாருதி, ஆவரங்கால்.

## கண்மணி நீ...

கருவில் உதித்து
கறையுலகில் குதித்து
காவியம் படைக்கவா... இல்லை
காரணமின்றி துடிதுடிக்கவா?
கறையுலகில்.....
நிச்சயம் தொலையும்
தொப்பிள் நாண் உறவு!
கருவறை உனக்கு
பள்ளியறையாகட்டும்
கண்மணி கண்மூடித்தூங்கு!

ஈழக்காந்தன், வரணியூர்.

## அமைதியாய்...

கருவில் தோன்றி
கலியுகத்தைக் காணவிருக்கும்
சின்னப் பையனே!
அன்னையின் கருவறையில்
அமைதியாய்த் தூங்கிடு!

S.துர்க்கா, கோண்டாவில்.

## துடிக்காதே!

கருவறையில் இருக்கும் நீ
வெளியே வரத் துடிக்காதே! ஏனெனில்..
உள்ளே இருக்கும் அமைதி
வெளியே கிடைக்காது!

S.நிகேதினி, வண்ணையூர்.

# மௌனத்தின் தேடல்கள் -35



அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றும் உள்ளத்து உணர்வுகளை *மிகச் சிறிய* கவிதைகளாக்கித் *தபால் அட்டையில்* வலம்புரி - சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.
***கிடைக்கவேண்டிய இறுதித் திகதி*** - 07.11.2004

அனுப்பவேண்டிய
முகவரி:- மௌனத்தின்
தேடல்கள்- 35
வலம்புரி -
சங்குநாதம்
15, வெள்ளாந்தெரு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

# கவிதைக் கலசம்

## வாழ்வு வசப்படும்!



சோகப் பாதை குறுக்கிடும்போது
துவண்டு விடாதே!
துணிந்து மோது - அவை
சிதைந்துபோகும் உருவற்று!
துன்பச் சூரியன் சுட்டெரிக்கும்போது
பொசுங்கிப் போகாதே - அதன்
விரலைப் பற்றிக்கொண்டு நடக்கப்பழகு
உன் வாழ்வு ஒளிபெறும்!
தோல்வி முள்ளைக் கண்டு
விலகி நடக்காதே - அதன் மேல்
பாய்போட்டு படுக்கக் கற்றுக்கொள்! - உன்
வெற்றிகள் உறுதியாகும்!
அகங்காரப் புயலடிக்குமபோது
தணலாய்ப் படுத்துவிடு - அது
உன்னை வேரோடு பிடுங்காது!
கோபத் தணலை உள்ளுக்குள் வைக்காதே -உன்
நற்பண்புகள் கருகிப் போகும்!
அன்புமழை பொழியும் போது
அசையா மரமாய் நிமிர்ந்து நில் - அந்த
வெள்ளம் உன்னை
இழுத்துச் செல்லாது!
அன்பு பொறுமை விடாமுயற்சி என்ற
முக்குணங்களையும் கற்றுக்கொள் - உன்
வாழ்வு வசந்தமாகும்!

M.சந்திரகலா. உரும்பிராய்.

## என் பற்று

என்னை வெறுத்தவளே.....!
நான் கறுப்பு
அதனால் ஒதுக்கினாய்
உள்ளத்து ஒளியுள்ள
சுத்தத் திராவிடன்
மெத்தக் கறுப்பனடி!

கரிய மீசை வேண்டாமென்றாய்
மீசை மழித்து
காதல் உத்தியோகம் பார்க்க
நான் ஐரோப்பிய குடியேற்றவாத
கூலிப்பக்தன் அல்ல!

உன் அற்பத்திற்காய்
அழுத்தமின்றி விட்டுக்கொடுக்க
இழிச்சவாயனல்ல - இவன்
சிறந்த தளத்தில்
உருவாக்கப்பட்ட
சுதேச பக்தன்!



மனம்திருந்தி....
புரிந்துணர்வுடன்....
மண்டியிட்டு வந்தாலும்
திடமாய்ச் சொல்கிறேன்
ஏற்கமாட்டேன்
உன் கோரிக்கைகளை!

புனித உணர்வின் பெயரால்
பூச்சாண்டி காட்டி
களங்கப்படுத்தியது
என்னை அல்ல
எம்மவர் அடையாளங்களை....

ந.வினோதரன்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## பேனா...


கையில் நீ தவன்றாய்
கற்பனை நான் செய்ய - நீ
வடிவம் கொடுத்தாய்!
உறவிற்குப் பாலமமைத்தாய்
பலமொழி தெரிந்தும்
என் தமிழ்மொழியில்
உரத்துப் பெயர் சொல்ல
உன்னத ஆசை
இருப்பினும்.....
என் ஊமை தடுத்தது!
முகம் தெரியா முகவரி
எனை அறிய ஆவலாக.....
நான் ஊமையாக.....!
என் உருக்குலையும்
உடம்பிலிருந்து உன்னத
உயிர் எடுக்க - முகவரி
உன்னியவேளை - உன்
ஆயுள் குறைத்து - என்
ஆயுள் கூட்டினாய்
என் முகவரி கொடுத்து!
அற்புதப் பேனா நீ!



ஈழக்காந்தன்,
வரணியூர்.

## உனக்குச் சம்மதமா?

செந்தீயில் துளிர்த்த
நம் காதல் தளிர்
உன் மௌனக் கார்மேகத்தில்
என் ஏக்கப் பெருமூச்சுக்
காற்றுப் பட்டு
இரு விழி பொழியும்
பெருமழையில்
மறைந்துபோவது
உனக்குச் சம்மதமா?



பிரம்ம சாத்வி.

## பெண் விடுதலை

எம் மண விலங்கை
உடைப்பதுபோல்
உணர்வுகளை உசுப்பும்
உன் வக்கிரகங்கள்
மெல்ல மெல்ல
மேலெழுகின்றன!



மரபுப் பூச்சாண்டிகள்
மணமேடைக்கு வரமுன்னே
எங்கே ஒளிந்திருந்தன...?
தேனாய் இனித்தவளை
இப்போது தேள் என்கிறாய்

காலில் தைத்த முள்ளைப்
பிடுங்கி எறிவது போல்
இதயத்தில் தைத்ததை
இலகுவில் பிடுங்கமுடியாது!

அர்த்தநாரீஸ்வரர் வடிவம்
ஆணையும் பெண்ணையும்
பகிர்ந்து சரிபாதியாய்
சமவுரிமைப் பிரகடனமாய்
இணைந்து நிற்கிறது
நீயோ....
ஆண் மேல் என்கிறாய்

ஆடை பாதி நிர்வாணம் மீதி
எனக் கூடிக்குலாவி
பிணைந்திருந்த வேளைகளை
நீ
ஆக்கிரமிக்கும் போது
நினைத்துப் பார்ப்பதில்லையா?

பெண் விடுதலை என்பதை
ஆண்களுக்கு எதிரானதாய்
ஏன் நினைக்கிறாய்?
நாம் கேட்பது
புதிதாய் வேறெதுவுமில்லை
உங்களைப் போல் வாழும்
சம சுதந்திரமே!

ச.முருகானந்தன்.

# க.பொ.த (சாதாரண தரம்)
# மாதிரிப் பரீட்சை-2004
## கர்நாடக சங்கீதம்

நேரம்: 3மணி

ஆக்கம்: திருமதி ப.விஜயகுமார்
யா/இணுவில் இந்துக் கல்லூரி.

## பகுதி I

***பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.***

01.இசையுடன் கூடிய உரையாடல் மூலம் கதையைக் கூறும் நாடகம்
(1)நாட்டிய நாடகம் (2)இசை நாடகம்
(3)குறுநாடகம் (4)குறியீட்டு நாடகம்

02.சங்கராபரண இராகத்தை மேலைத்தேய இசையில் அழைப்பது
(1)மேஜர்ஸ்கேல் (2)பூர்விதாட் (3)பைரவதாட் (4)பூப்

03.எல்லாத் தேசங்களிலும் பாடப்படும் இராகம்
(1)கல்யாணி (2)ஆரபி
(3)மத்தியமாவதி (4)மோகனம்

04.கிரகத்தின் மறுபெயர்
(1)லயம் (2)ஜாதி (3)எடுப்பு (4)களை

05.72 மேள இராகத்தில் 37-72 'வரையுள்ள இராகங்கள் குறித்துநிற்கும் பகுதி
(1)பூர்வாங்கம் (2)உத்தராங்கம்
(3)உபாங்கம் (4)பாஷாங்கம்

06.சபாகான உருப்படியில் அடங்காதவை
(1)கீர்த்தனை (2)தில்லானா (3)கீதம் (4)பதம்

07.ஏழு ஸ்வரங்களும் நிற்கும் நிலையைக் குறிப்பது
(1)லகு (2)ஸ்தாயி (3)ஆவர்த்தம் (4)அங்கம்

08.விவாதி ஸ்வரங்களில் ஒன்று
(1)சுத்தரிஷபம் (2)சதுஷ்ருதிரிஷபம்
(3)ஷட்ருதிரிஷபம் (4)சுத்த மத்திமம்

09.மேலைத்தேய வாத்தியமாக இருந்த வயலினை கர்நாடக சங்கீதத்தில் புகுத்தியவர்
(1)கோபாலகிருஸ்ணர் (2)சியாமா
(3)முத்துஸ்வாமி தீட்சிதர் (4)பாலஸ்சுவாமி தீட்சிதர்

10.தியாகராஜரின் இசைநாடகங்களில் ஒன்று
(1)சீகாழி தலபுராணம் (2)பிள்ளைத்தமிழ்
(3)நந்தனார் சரித்திரம் (4)பிரகலாதா பக்திவிஷயம்

11.தில்லானா அமைந்துள்ள காலம்
(1)சௌக்ககாலம் (2)மத்திமகாலம்
(3)துரிதகாலம் (4)விளம்பிதகாலம்

12.திருத்தாண்டகம் பாடப்படும் இராகம்
(1)கரிகாம்போதி (2)கல்யாணி (3)தோடி (4)சங்கராபரணம்

13.பல்லவி பாடும் முறையில் ஒரு ஒழுங்குமுறையை ஏற்படுத்தியவர்
(1)பச்சிமிரியம் ஆதிஅப்பையர் (2)பைடால குருமூர்த்தி
(3)தியாகராஜா (4)தீட்சிதர்

14.பல்லியம் என்றால் என்ன?
(1)நாட்டுப்பாடல் (2)பஜனை
(3)வாத்தியக் கூட்டிசை (4)பக்திப்பாடல்

15."உன்னை யல்லால" என்ற கீர்த்தனை அமைந்துள்ள இராகம்
(1)பந்துவராணி (2)மோகனம்
(3)ஆரபி (4)சிம்மேந்திரமத்திமம்

16."கலைகள் மிகுந்த" என்ற உருப்படி ஒரு
(1)கீர்த்தனை (2)இராகமாலிகை (3)பதம் (4)ஜாவளி

17./ இக்குறியீடு காட்டி நிற்பது
(1)ஏற்கஜாரு (2)இறக்கஜாரு
(3)அங்கமுடிவு (4)ஆவர்த்தன முடிவு

18.கண்டஜாதி ஜம்பை தாளத்தின் அங்க அடையாளம்
(1)$1_5$ U 0 (2)$1_7$ U 0 (3)$1_3$ U 0 (4)$1_4$ U 0

19.எல்லாத் தாளங்களிலும் இடம்பெறும் அங்கம்
(1)U (2)0 (3)/ (4)+

20.தீர்க்க ஸ்வரம் எனப்படுவது
(1)குறில் (2)ஜதி (3)லயம் (4)நெடில்

21.விவித கான வினோதன் என்பவரால் பிரபல்யப்படுத்தப்பட்ட பாடல்
(1)கோலாட்டப்பாடல் (2)மெல்லிசைப்பாடல்
(3)கப்பல்பாடல் (4)கும்மிப்பாடல்

22.72 மேளகர்த்தா சக்கரத்தை விளக்கும் நூல்
(1)சங்கிரக சூடாமணி (2)சங்கத ரத்னாகரம்
(3)சுதாகரம் (4)நாட்டிய சாஸ்திரம்

23.10ஆவது சக்கரத்தின் பெயர்
(1)இந்து (2)ருத்ர (3)திசி (4)பாண

24.வாத்தியத் திரயங்களாவன
(1)வீணா வயலின் குழல் (2)வீணா வேணு மிருதங்கம்
(3)விணா தம்புரா குழல் (4)பிடில் மகுடி யாழ்

25.மிருதங்கத்தின் வலந்தலையின் நடுவில் காணப்படுவது
(1)பிருடை (2)லங்கர் (3)தொப்பி (4)கரணை

26.முத்துஸ்வாமி தீட்சிதரின் முத்திரை
(1)ராமதாஸ (2)பத்மநாப (3)புரந்தரகட (4)குருகுக

27.கங்கேரிநாட்டுச் சங்கீதத்தில் காணப்படும் இராகம்
(1)சிம்மேந்திர மத்திமம் (2)கரகரப்ரியா
(3)தோடி (4)கனகாங்கி

28.நன்கு சுருதி சேர்க்கப்பட்ட தம்புராவை மீட்டும்போது ஒலிக்கும் ஸ்வரம்
(1)சுத்தரிஷபம் (2)சதுஸ்ருதிதைவதம்
(3)சதுஸ்ருதிரிஷபம் (4)சுத்ததைவதம்

29.திரைப்படத்தின் மூலம் கர்நாடக இசையைப் பரப்புவதில் வெற்றி கண்டவர்
(1)தியாகராஜர் (2)பாபநாசம்
(3)சியாமா (4)கோபாலகிருஸ்ணா

30.மேலைத்தேய இசையில் அப்பியாசவரிசை பாடப்படும் இராகம்
(1)சங்கராபரணம் (2)மாயாமாளவ கௌளை
(3)கீரவாணி (4)கல்யாணி

31."பூத்தேன் தாயன " என்ற தேவாரத்தின் பண்!
(1)இந்தளம் (2)பழந்தக்கராகம் (3)பழம்பஞ்சுரம் (4)முல்லை

32.ஆலயங்களில் திருமுறைகளை ஓதும் பாரம்பரியம் தோன்றிய காலம்
(1)பாண்டியர் காலம் (2)சேரர் காலம்
(3)சோழர் காலம் (4)நாயக்கர் காலம்

33.ஸரீ, காமபா இவற்றில் காணப்படும் அட்சரங்களின் எண்ணிக்கை
(1)8 (2)11 (3)10 (4)9

34.தாளத தந்தியையுடைய வாத்தியம்
(1)வயலின் (2)வீணா (3)தம்புரா (4)கோட்டுவாத்தியம்

35.5ஸ்வரங்களை எடுத்துக்கொள்ளும் இராகம்
(1)ஷாடவம் (2)சம்பூர்ணம் (3)ஔடவம் (4)ஸ்வராந்தரம்

36.புல்லாங்குழலில் வாயைவைத்து ஊதும் துவாரத்தின் பெயர்
(1)அணிசு (2)வில் (3)வெண்டயம் (4)முகாந்திரம்

37.வாழ்க்கையின் ஆரம்பத்தில் பாடப்படும் பாடல்
(1)தாலாட்டு (2)ஒப்பாரி (3)பக்திப்பாடல் (4)ஊஞ்சல்

38.தாளத்தின் ஆறு அங்கங்களுக்கு வழங்கப்படும் பெயர்
(1)லயம் (2)ஜதி (3)களை (4)ஷடங்கம்

39.பஜனைப் பத்ததியின் தந்தை என அழைக்கப்படுபவர்
(1)அன்னமாச்சாரியார் (2)தாளம்பாக்கம் சின்னையா
(3)அண்ணாமலைசெட்டியார் (4)குமாரசுவாமி

40.அன்னிய ஸ்வரத்தை எடுத்துக்கொள்ளும் ராகம்
(1)உபாங்க (2)உத்தராங்க (3)பாஷாங்க (4)பூர்வாங்க

*(புள்ளி 40x1=40)*

## பகுதி II

***எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.***

01.சிறுகுறிப்பு எழுதுக.
**i**.தாது **ii**.ஸ்தாயி **iii**.உபாங்கம் **iv**.கிரகம்

02.ஜனகராகங்களின் எண்ணிக்கை யாது? அக்கினி சக்கரத்திலுள்ள இராகங்களையும், ஸ்வரஸ்தானங்களைக் குறிப்பிடுக?

03.நாட்டியக் கச்சேரியில் தாளவாத்தியமாகப் பயன்படுத்தப்படும் கருவி யாது? அதன் அமைப்பை விளக்குக?

04.இராமநாடகத்தை இயற்றியவர் யார்? அவரது உருப்படிகள் 2 தருக? அவர் இசைக்காற்றிய தொண்டை விபரிக்குக?

05.பின்வரும் உருப்படிகள் இரண்டிற்கு லட்சணம் தருக?
**i**.தில்லானா **ii**.பதம் **iii**.ஜதீஸ்வரம்

06.ஸப்த தாளங்கள் 35 தாளங்களாகிய விதத்தை உதாரணத்துடன் தருக?

07.20ஆம் நூற்றாண்டின் இலங்கையின் இசை வளர்ச்சி பற்றி விளக்குக?

*(புள்ளி 12x5=60)*

**க.பொ.த(சா/த) மாணவர்களே!**
**வலம்புரியில் தொடர்ந்து உங்களுக்கான பயிற்சி வினாத்தாள்கள் வெளிவரும்.**
**உங்கள் பிரதிக்கு முந்துங்கள்.**

# மதமாற்றத் தடைச் சட்டம் தேவையானது

வாதம்-4

விவாத அரங்கு -6

**மத மாற்றத் தடைச்சட்டம் தேவையானதா, தேவையற்றதா என்ற விவாத அரங்கிற்கு தேவையானது என தனது வாதத்தை முன்வைக்கின்றார் சுன்னாகம் ச.சிவரூபன்**

உலகிலேயே மிக முக்கிய மதங்களாக இந்துமதம், கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம் என்பவற்றைக் குறிப்பிடலாம். இதில் இந்துமதமும், பௌத்த மதமும் இந்தியாவிலேயே தோற்றம் பெற்றது. கிறிஸ்தவம் யேசுநாதர் மூலமாக பெத்தலகேமில் தோற்றம் பெற்று, ஐரேபபா முழுவதும் பரவியது. இஸ்லாம் நபிகள் நாயகம் மூலமாக அரபு நாட்டில், பாலை வனத்தில் தோற்றம் பெற்றது.

பௌத்த சமயம் கௌதம புத்தரின் போதனைகளிலிருந்து தோற்றம் பெற்றது. இந்து மதமும், பௌத்த மதமும் ஆசிய நாடுகளில் பரவியது. இதைவிட வேறு மதஙகளும் பல நாடுகளில் காணப்படுகின்றன.

இந்து மதத்தின் தொன்மையைப் பார்த்தால் சிந்துவெளி நாகரிகத்துக்கு முற்பட்டது. அதாவது கிறிஸ்துவுக்கு முன் தோன்றியது எனலாம். துறவியான புத்தர் ஆரம்பத்தில் இந்து சமயத்தைச் சார்ந்த மன்னன் பரம்பரையிலே பிறந்து வளர்ந்தவர். கிறிஸ்தவ மதத்தை யேசுநாதர் 2004 ஆண்டுகளுக்கு முன்தோற்றுவித்தார். யூதர்களால் கொலலப் பட்ட யேசுநாதரின் மகிமையை அவர் உயிர்த தெழுந்த போது மட்டுமே யூதர்கள் நம்பி அவரது கொள்கைகளை ஏற்றனர். யூதர்களால் அடிமைகளாக்கப் பட்டு பின்னர் பாலைவனத்தில் கொண்டு சென்று விடப்பட்ட அடிமைகளுக்குள்ளிருந்து முகமது நபி பிறந்து,முஸ்லிம் மதத்தைத் தோற்றுவித்தார்.

அதாவது பைபிளின் புதிய ஏற்பாடு கிறிஸ்தவம், பழைய ஏற்பாடு முஸ்லிம் மதம் எனலாம். இதனை யாரும மறுக்கமுடியாது. எனவே கிறிஸ்தவத்திலிருந்து பிரிந்து தான் முஸ்லிம் மதம் உருவானது. ஆனால கிறிஸ்துவுக்கு முன் சிந்து வெளியிலிருந்து இந்தியாவில் இந்துமதம் தோற்றம் பெற்று விட்டது.

இங்கு மதங்கள் எல்லாவற்றிலும் இறைவனைப் பற்றி அதாவது இந்த உலகத்தைப் படைத்து இயக்கும் சக்தியைக் கடவுளாக மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். இந்துமதத்தில் சிவன், சக்தி, விநாயகர், முருகன் என இறைவனைக் குடும்ப அமைப்பாக, தாய், தந்தை, பிள்ளை வடிவத்தில் வைத்து வழிபடுகின்றனர்.

கிறிஸ்தவத்திலும் ரோமன் கத்தோலிக்கர்கள் யேசு, அவரது தாய், தந்தையென குடும்ப அமைப்பாகவே வழிபடுகின்றனர். ஆனால் அதிலிருந்து பல பிரிவுகள் தோன்றி இயேசுவை மட்டும் வழிபடுகின்றனர். இதனால் கருத்து மோதல்களும், மதச் சண்டைகளும் நடைபெறுகின்றன.

இஸ்லாமிய மதத்திலும் சன்னி முஸ்லிம், சியா முஸ்லிம் என்று இரு பிரிவு உண்டு. அதறகுள்ளும் சன்னி முஸ்லிம் கனீபா, மாலிக், சவி, கன்பால் என நான்கு வகை உண்டு. அதுபோல சியா முஸ்லிம் இத்னா, அசாரி,இஸ்மையில், சியாதிஸ் என நான்கு வகையாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. இலங்கை முஸ்லிம்கள் சவி பிரிவைச் சேர்ந்தவர்கள்.

இங்கு முஸ்லிம் மதத்தின் மேற்படி பிரிவுகளுக்குள் பெரும் இன மோதல்கள் நடப்பதை வெளிநாடுகளில் காணலாம். முஸ்லிம் மதம் கூடுதலாக அரபு நாடுகளிலும் ஆபிரிக்க நாடுகளிலும் காணப்படுகின்றது. இந்துமதம் ஆசிய நாடுகளில் கூடுதலாகக் காணப்படுகிறது.

இங்கு தொன்மையை எடுத்துக் கொண்டால் இந்து மதமே தொன்மையானது. ஆனால் அதைப் பின்பற்றுபவர்கள் 3 ஆம் உலக நாடுகளைச்சேர்ந்த மக்கள் எல்லா மதத்திலும் ஒழுக்கமான வாழ்க்கை முறையைக் கூறினாலும் அதையே அடிப்படையாகப் பின்பற்றி வாழ்பவர்கள் இந்துக்களே ஆவார்கள். ஆனால் இந்துக்கள் சாதி முறை அடிபபடையில் வாழ்ந்ததால் அவர்கள் முற்காலத்தில் கோயில்களுககுள கூட சில சாதி இந்துக்கள் போக முடியாது காணப்பட்டது.

மேலும் ஆங்கிலேயர் ஆட்சி மூன்றாம் உலக நாடுகளில் அநேக நாடுகளில் நடைபெற்றதால் வேலைக்காக மதமாற்றம் நடைபெற்றது. ஆனால தற்போது எல்லா நாடுகளும் சுதந்திரமானவை அதே போல் இலங்கையிலும் 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் உறுப்புரை 10 இல் ஒவ்வொரு தனி மனிதனும் தாம் விரும்பிய மதக் கோட்பாட்டை பின்பற்றவும், அதில் சேரவும் உள்ள உரிமையை அடிப்படையுரிமையாக வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையை எடுத்துக் கொண்டால் பௌத்த மதத்தவரும், இந்து மதத்தவரும் தற்போதும் வறுமையை மட்டும் காரணமாக வைத்து கிறிஸ்தவ மதத்திற்கு வெளிநாட்டு கிறிஸ்தவ நிறுவனங்களால் மதம் மாற்றப்பட்டுக கொண்டிருக்கிறார்கள். ஏனெனில் தற்போது இந்து சமயத்தில் உள்ள எல்லா சாதியினரும் கோயில்களுக்குள் செல்லவோ, பூசைகளைச் செய்யவோ கூடியதாக இருக்கின்றது. எனவே மேற்படி உறுப்புரை 10 இல் உள்ள அடிப்படை உரிமையை வைத்துப் பண ஆசை, பொருளாசை காட்டி மதம் மாற்றப் படுகிறார்கள். இதற்காக வீடு, வீடாகச் சென்று போதனைகள் நடாத்த ஆடகள் உள்ளனர். ஆனால் இந்து மதத்தவர் அவ்வாறு வீடுவீடாக செல்வதில்லை.

இன்னொன்று முக்கியமானது. முஸ்லிம் ஒருவரைத் திருமணம் செய்ய வேண்டுமானால் கட்டாயம் முஸலிம் மதத்திற்கு மாறவேண்டும். அவ்வாறு பலர் இலங்கையில் இந்துமதம் பௌத்த மதத்திலிருந்து மாறியுள்ளனர்.

ஆனால் யாராவது முஸ்லிம் ஒருவர் வேறு மதத்திற்கு மாறியுள்ளாரா? என்பதற்கு இல்லை என்பதே பதிலாகும். இதற்குக் காதல் திருமணம் ஒரு காரணமாகும்.

எனவே மதமாற்றத்தால் பாதிக்கப்படுவது இந்து சமயமும், பௌத்த சமயமுமே ஆகும்.

இவர்கள் கூடுதலாக வறுமை காரணமாக ஆசை வார்த்தை கூறப் பட்டு பணம், பொருட்களுக்காக கிறிஸ்தவ மதத்திற்கும் காதல் திருணம் காரணமாகவே கூடுதலானவர் முஸ்லிம் மதத்திற்கும் மாறுகின்றனர். இது இலங்கையில் தற்போது சர்வசாதாரணமாகி விட்டது. என்னைப் பொறுத்தவரையில் மதம் மாறுவது என்பது ஒரு பாவச் செயலாகும். ஏனெனில் எல்லா மதமும் ஒரு கோட்பாட்டையே அடிப்படையில் கொண்டுள்ளது. எனவே பொருளாதாரக் காரணிகளைக் கொண்டு மக்கள் மதம் மாறுவது தடை செய்யப்படவேண்டும்.

ஒருவர் மதம் மாறவிரும்பினால் அதற் குரிய உண்மையான காரணத்தையும் நோக்கத்தையும் விண்ணப்பம் மூலம் மாவட்ட அடிப்படையின் கீழ் நீதிமன்ற அமைப்பு போன்று ஒரு மனறு அல்லது சபையை தோற்றுவித்து அதன் அனுமதி பெற்று மதம் மாறும் வகையில் இலங்கையில் மதம் மாற்றத் தடைச் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்பதே எனது வாதமாகும்.

---

# இராணுவத்தினரும் -விடுதலைப்புலிகளும் புரிந்துணர்வுடன் செயற்பட்டு வருகின்றனர்

## மனித உரிமைகள் ஆணையாளர் செல்வகுமாரன் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

பொலிஸார் மனித உரிமை களை மதித்து மனித உரிமை ஆணைக் குழுவின் அலுவல்களின் கடமைகளை உணர்ந்து புரிந்துணர் வுடன் செயற்படவேண்டும் என இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் ஆணையாளர் என்.செல்வகுமாரன் தொிவித்தார்.

யாழ்ப்பாணம் வருகைதந் துள்ள இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் ஆணையாளர் என்.செல்வகுமாரன் நேற்றுக் காலை 10.00 மணிகது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் பத்திரிகையாளர்களைச் சந்தித்துக் கலந்துரை யாடல் ஒன்றை நடாத்தியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யுத்த நிறுத்த ஒப்பத்தத்துக்கு முன் யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் சம்பந்தப்பட்ட முறைப்பாடுகளே அதிகளவு செய்யப்பட்டுள்ள போதும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பிற்பாடு இந் நிலைமை மாறிவிட்டது.

ஆனாலும், பொலிஸாருடன் தொடர்புடைய முறைப்பாடுகள் தொடர்ந்தும் கிடைத்தவண்ணமே உள்ளது.

இதைவிட மொழிஉரிமை தொடர்பானதும் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பானதுமான முறைப்பாடுகள் உட்பட கலாசார சீரழிவுகள், தனிப்பட்ட மக்களுடைய வன்முறைகள், அரச அதிகாாிகளால் பாதிக்கப்பட்ட அலுவலர்கள், காணாமல் போனவர்களும், சுகாதாரப் பிரச்சினைகள் பற்றிய முறைப்பாடுகளே அதிகளவு கிடைக்கப்பெற்றுள்ளன.

அண்மைக்காலத்தில் இராணுவத்தினரது செயற்பாடுகள் பாராட்டத் தக்கதாகவே உள்ளன.

அதாவது இராணுவமும், புலி



களும் புரிந்துணர்வுடன் செயற்பட்டு வருகின்றனர். மற்ற நாடுகளுடன் பார்கதும் போது இவர்களுடைய செயற்பாடுகள் திருப்திகரமாகவுள்ளன.

இவற்றை ஐக்கிய நாடுகளின் கிளை நிறுவன அதிகாரிகளும் புரிந்து கொண்டுள்ளனர்.

தமிழ் மக்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்வதற்கு மொழிப் பிரச்சினை பெரும் குறைபாடாகவுள்ளது.

தமிழ் மக்கள் பொலிஸ் சேவை யில் இணைவதற்குப் பெரிதும் தயககம் காட்டி வருவதினாலேயே இக் குறைபாடு காணப்படுகிறது.

இதனால், தமிழ் தெரிந்த பொலிஸாரின் எண்ணிக்கையும் குறைவாகவே உள்ளது.

அத்துடன், தற்போது கடமையாற்றும் தமிழ்ப் பொலிஸாரும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் கடமையாற்றுவதற்குப் பின் வாங்குகின்றார்கள்.

இதனால் சிங்களப் பொலிஸாருக்கு தமிழ்ப் பயிற்சி வழங்கப் படுகின்றது.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகளை மக்களும் பொலிஸாரும் மதித்து நடந்து வருகின்றபோதும் சில அத்துமீறல் நடவடிக்கைகள் இடம்பெறத தான் செய்கின்றன. இங்கு உளளூரில் இடம் பெயர்ந்த குடும்பங்களின் மனித உரிமைகள் மீறல் சம்பவங்கள், அதியுயர் பாதுகாப்பு வலயம், போக்கு வரத்து உள்ளிட்ட பல பிரச்சினைகளின் ஆழங்களைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

இருந்தபோதிலும் கூட யாழ்ப்பாண மாவட்டத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் மேம்படுத்துவதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு அதன் சட்டவாக்க நியமங்களுக்கு ஏற்ப செயற்படும்.

மேலும் யாழ்.அரச செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் திணைக்களத் தலைவர்களைச் சந்தித்த சமயம் இங்கு மேற்கொள்ளப் படும் மக்களுக்கான செயல் திட்டங்கள் குறித்து அவற்றுக்கு ஒதுக்கப்பட்ட நிதித்தொகை பற்றியும் மக்கள் அறிய வேண்டியது அவர்களின் சமூக உரிமை என்பதை எடுத்துக் காட்டியதுடன் தற்போது புனரமைப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ள கைதடிப் பாலத்துக்கு அருகில் போடப் பட்டுள்ள தற்காலிக பாதையினால் மக்கள் அடையும் துன்பங்கள் பற்றியும் சுட்டிக்காட்டினேன்.

அதன் போது கைதடிப் பாலத்தின் புனரமைப்புப் பணிகள் யாவும் 3 வார காலத்துக்குள் பூர்த்தியாக்கப்பட்டு விடுமென்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரி வித்ததாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன், யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 14 பொலிஸ் நிலையங்களிலும் பொது மக்களிடம் இருந்து அவர்களது தாய் மொழியில் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்படுவதில்லையென செய்தியாளர்கள் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் கூட தமிழ் மொழி தெரிந்து பொலிஸார் பொலிஸ் நிலையங்களில் இல்லாமையே அடிப்படைக் காரணம் என்றார் இது விடயமாக இலங்கைமனித உரிமைகள ஆணைக் குழுஅரசகரும மொழி ஆணையகத்துடன்தொடர்பு கொள்ளும் எனக் கூறியுள்ளார் என்பது குறிப் பிடத்தக்கதாகும். (ப-16,19,10)

---

# கனேடிய தூதரகம் மன்னிப்புக் கோரியது

விசா பெறவந்த பௌத்த பிக்குமார்கள் மூவர் மீது 'அந்தராக்ஸ்' பீதி காரணமாக தாம் மேற்கொண்ட நடவடிக்கை குறித்து கொழும்பிலுள்ள கனேடிய தூதரகம் மன்னிப்பு கோரியுள்ளது.

இந்நடவடிக்கையானது எத்தகைய உள்நோக்கமும் கொண்டது அல்ல எனவும் 'அந்தராக்ஸ்' அச்சம் காரணமாகவே பாதுகாப்பு நலன் கருதி இதனை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டதெனவும்,

பௌத்த பிக்குகளின் ஆடைகள் அவர்களது அனுமதியுடனே அகற்றப்பட்டு பௌத்த துறவிகளுக்குரிய காவி உடை வழங்கப்பட்டதெனவும் கனேடியத்தூதரகம் விடுத்த அறிக்கையில் இது பற்றிமேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# மீள் பார்வை

# ஈழத் தமிழர் இறைமை

அத்தியாயம்-2 தொடர்

மு. திருச்செல்வம்

சிங்கள மக்கள் மத்தியிலும் தமிழ் மக்கள் மத்தியிலும் வேட்பாளர்களை நிறுத்தியிருந்தது. ஆறாவது பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவியாக இருந்த திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தன்னுடன் அப்பொழுது எதிர்க்கட்சி வரிசையில் இருந்த இடது சாரி கட்சிகளான இலங்கை சமசமாஜக் கட்சி இலங்கை கம்யூனிஸ் கட்சி ஆகியவற்றுடன் தேர்தல் ஒப்பந்தம் செய்திருந்தது. மூன்று கட்சிகளும் பொது வேலைத்திட்டத்தின் கீழ் தம்மிடையே போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் செய்திருந்தன. நாடெங்கனும் உள்ள தேர்தல் தொகுதிகளில், சிங்களப் பகுதிகளிலும் தமிழ்ப்பகுதிகளிலும் இக்கட்சிகள் போட்டியிட்டன. இலங்கைத் தமிழரசுக்கட்சி, இலங்கையின் தமிழ்நிலப் பகுதிகளான வடக்கு -கிழக்கு மாகாணங்களில் உள்ள தேர்தல் தொகுதிகளில் மட்டும் வேட்பாளர்களை நிறுத்தியது. அவ்வாறே அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் தமிழ்நிலப்பகுதிகளில் மட்டுமே போட்டியிட்டது. இக்கட்சிகள் தவிர ஏனைய கட்சிகளும் நாடெங்கனும் வேட்பாளர்களை நிறுத்தின.

இக்கட்சிகளுள் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் உள்ள மூன்று கட்சிகளின் கூட்டு முன்னண மட்டுமே அரசியலமைப்பு யாக்க அவை ஒன்றை அமைப்பது மூலம் இலங்கையைத் தன்னாட்சியும், இறைமையும் உடைய குடியரசாக மாற்றுவோம் எனத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தது. வாக்காளர்களிடம் ஆற்றலுரிமையைக் கோரியிருந்தது.

ஏனைய கட்சிகளும் அரசியலமைப்புச் சீர்திருத்தம் பற்றியும் தன்னாட்சியையும் இறைமையையும் மீளப்பெற்ற குடியரசை அமைப்பது பற்றியும் குறிப்பிட்டிருந்தன. பாராளுமன்ற முறைகள் மூலம் இதனைச் செய்வதென ஐக்கிய தேசியக்கட்சி அறிவித்திருந்தது.

தமிழர்களுக்கு தனி மாநில ஆட்சி; சிங்களவர்களுக்கு தனி மாநில ஆட்சி; இரண்டும் இணைந்த மத்திய அரசு; இவற்றை உள்ளடக்கிய கூட்டாட்சி அரசியலமைப்பு அமைப்பதைத் தனது அடிப்படை நோக்கமாகக் கொண்டு தேர்தலில் இலங்கைத் தமிழரசுக்கட்சி போட்டியிட்டது. இந்தக் கொள்கையை முன் வைத்துத்தான் இதற்கு முன்பு நடைபெற்ற எல்லாப் பொதுத்தேர்தல்களிலும், ஏனைய தேர்தல்களிலும் தமிழரசுக்கட்சி 1949ஆம் ஆண்டில் இருந்து போட்டியிட்டு வந்துள்ளது.

1970மே 27ஆம் நாள் 7ஆவது பாராளுமன்றத்திற்கான பொதுத்தேர்தல் நடைபெற்றது. மூன்று கட்சிகளின் கூட்டு முன்னணி இத்தேர்தலில் பெரும் வெற்றி பெற்றது.

### தேர்தலில் வென்ற கட்சிகளின் நிலை பின்வருமாறு-

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி - 91
இலங்கை சமசமாஜக் கட்சி - 19
ஐக்கிய தேசியக் கட்சி - 17
இலங்கை தமிழரசுக்கட்சி - 13
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி - 6
அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் -3
கட்சி சாராதவர்கள் -2

மூன்று கட்சிகளின் கூட்டு முன்னணி மொத்தமாக 116 இடங்களைப் பெற்றிருந்தது. 157 இடங்கள் உள்ள சனப்பிரதிநிதிகள் சபையில் மூன்றில் இரண்டு வாக்குப் பலத்தை கூட்டு முன்னணி பெற்றிருந்தது. தேர்தலில் 84.9சதவீதமான வாக்காளர்கள் வாக்களித்திருந்தனர். மொத்தம் 4,949 ,616 வாக்காளர்கள் வாக்களித்திருந்தனர் இவர்களுள் 2 ,415,302 வாக்காளர்கள் கூட்டு முன்னணி ஆதரவாக வாக்களித்திருந்தனர். எதிர்க்கட்சிகள் கூட்டு மொத்தமாக 2,534,314 வாக்குகளைப் பெற்றிருந்தார்கள். கூட்டு முன்னணிக்கு கிடைத்த வாக்குகளை விட எதிர்கட்சிகள் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்றிருந்தன. இவை கூட்டு முன்னணியின் பொது வேலைத்திட்டத்திற்கு எதிராகக் கிடைத்த வாக்குகளாகும்.

தமிழர்களின் நிலப்பகுதியான வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழர்களுக்குரிய தேர்தல் தொகுதிகளில் கூட்டு முன்னணியின் வேட்பாளர்கள் போட்டியிட்டனராயினும் ஒருவராவது வெற்றி பெறவில்லை. தமிழ் வாக்காளர்கள் கூட்டு முன்னணியின் பொது வேலைத்திட்டத்தை முற்றாக எதிர்த்திருந்தார்கள்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் கூட்டு முன்னணி ஆட்சி அமைத்தது. திருமதி பண்டாராநாயக்கா நாட்டின் புதிய பிரதமரானார். 7ஆவது பாராளுமன்றத்தின் கூட்டத் தொடரைத தொடக்கி வைத்து அரியணை உரையாற்றிய ஆளுநர் முதல்வர் வில்லியம் கோபல்லாவை கூட்டு முன்னணியின் வேலைத்திட்டத்தை விளக்கிக் கூறினார்.

## அரசியலமைப்பு யாக்க அவை அமைத்தல்

ஏழாவது பாராளுமன்றத் தொடர் கூட்டத்தைத் தொடக்கி வைத்து ஆளுநர் முதல்வர் ஆற்றிய அரியணை உரையையும் அதற்கு நன்றி தெரிவித்து சனப்பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள் நிறைவேற்றிய தீர்மானத்தையும் மேற்கோள் காட்டிப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா கடிதம் எழுதினார்கள். சனப்பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள் 157 பேருக்கும் தனித்தனியாகக் கடிதம் எழுதினார்கள்.

"சனப்பிரதிநிதி சபை உறுப்பினர்களின் கூட்டம் நடைபெறும். வருக" எனக் கடிதத்தில் அழைததார்கள். இக் கூட்டம் கொழும்பு றோஜயல் ஜூனியர் பாடசாலையின அரங்கமான நவரங்கலாவில் நடைபெறும் என அறிவித்தார். 1970 யூன் 19ஆம் நாள் நடைபெறும் என எழுதினார்.

சனப்பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள் சபை மண்டபத்தில் கூடினால் அது சனப்பிரதிநிதிகள சபைக் கூட்டமாகிவிடும். புதிய அரசியலமைப்பை யாக்கும் சட்ட உரிமை சனப்பிரதிநிதிகள் சபைக்குக் கிடையாது. இருந்திருந்தாற்றான் எப்பொழுதே செய்திருப்பார்களே!

சபை மண்டபத்தில் கூடாது, உறுப்பினர்கள் நவரங்கலாவில் கூட வேண்டும் எனப் பிரதமர் திட்டமிட்டே அழைப்பு விடுத்தார். சனப்பிரதிநிதிகள் சபைக்கூட்டம் வேறு சனப்பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களின் கூட்டம் வேறு இந்த வேறுபாட்டை வலியுறுத்தவே "நவரங்கலாவிற்கு வாருங்கள்" எனப் பிரதமர் அழைத்தார்.

இநதக் கூட்டத்தை கூட்டும் ஆற்றல் உரிமையை மக்கள் தமக்கு தந்துள்ளார்கள் என கூட்டு முன்னணித்தலைவர்கள் கூறினார்கள். மூதறிஞர் செல்வநாயகம் கூட்டு முன்னணித் தலைவர்களின் வாதத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

"புதிய அரசியல் திட்டத்தை உருவாக்க கடந்த பொதுத்தேர்தல் மூலம் பொதுமக்கள் சம்மதம் தெரிவிக்கவில்லை. பொதுத்தேர்தலின் முடிவை அரசியலமைப்புத் திட்டத்தில் மாற்றம் செய்ய பொதுமக்கள் வழங்கிய ஆற்றலுரிமையாகக் கொள்ளமுடியாது. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் அத்ததகைய ஆற்றலுரிமையை அரசாங்கத்திற்கு வழங்கவில்லை"

(தொடரும்)

## தனியார் துறையினருக்கும் சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளது

(கொழும்பு)

அரங்சாங்கம் மற்றும் தனியார் துறையினரின் சம்பளங்களை அதிகரிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம இணங்கியுள்ளதாக அகில இலங்கை வர்த்தக சங்கங்கள் சம்மேளனமும், கமபனிகளுக்கிடையிலான ஊழியர் ஒன்றியமும் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சில் கடந்த வெள்ளிக்கிழமை நீண்டநேரமாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது அரசாங்க, தனியார் துறையினரின் சம்பளங்களை அதிகரிப்பது பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது தனியார் மற்றும் அரசாங்கத் துறைகளில் நிலவும் ஆயிரத்து 750 சம்பள் முரண்பாடுகளை நீக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க நிதியமைச்சர் இணங்கியுள்ளார்.

தற்போது வாழ்க்கைப்படியாக வழஙகப்படும் 2ஆயிரத்து 200 ரூபா சம்பளத்துடன் சேர்த்துக் கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அமைச்சரவை ஆராய்ந்து தீர்மானங்களை எடுக்கவுள்ளது.

தனியார் துறையினரின் சம்பளங்களை அதிகரிப்பது பற்றி வர்த்தக சமமேளனத்துடனும், வேலை கொள்வோர் சம்மேளனத்துடனும் தாமவிரிவாகப் பேச்சுவார்த்தைகளை நடந்த விருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித் துள்ளார்.

(ந-12)

## ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசாரத்தில் ஐக்கிய தேசியக் கட்சி மிகத் தீவிரம்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலை இலக்காகக் கொண்டு நாடளாவிய ரீதியில் சுமார் ஆயிரம் பிரசாரக் கூட்டங்களை நடாத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

இந்தத் தொடர்ச்சியான கூட்டங்களின் முதலாவது கூட்டத்தினை அடுதத வருடம் ஜனவரி மாதம் முதல வாரத்தில் ஆரம்பிப்பதற்குத தாம் ஆலோசித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் ஒரு கூட்டத் தொடரையும் மாவட்ட மற்றும் கிராம மட்டங்களில் பல்வேறு பிரசாரக் கூட்டங்களையும் நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தக் கூட்டத்தொடருக்கான ஏற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-121)

## இலங்கைக்கான ஐரோ.ஒன்றியத்தின் நிதியுதவி அதிகரிக்கப்படவுள்ளது

(கொழும்பு)

டோக்கியோவில் காணப்பட்ட உடன்பாட்டுக்கு அமைய இலங்கைக்கான உதவிகளை விரிவுபடுத்துவதற்கு ஐரோப்பிய ஆணைக் குழு இணங்கியுள்ளது.

ஐரோப்பிய ஆணைக்குழுவிற்கும் இலங்கை அரசாங்கத்தின் இணைக்குழுவுக்குமிடையிலான 16 ஆவது சந்திப்பு நேற்று முன்தினம் பிரான்ஸில் நடைபெற்ற போது இந்த இணக்கம் காணப்பட்டதாக இலங்கை வெளி விவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உதவி மூலம் சுமார் 100 மில்லியன் நிதியுதவி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, பாதுகாப்பு, மாணவர் பரிமாற்றம் உட்பட பல்வேறு விடயங்களில் எதிர்காலத்தில் ஒத்துழைப்புக்களை மேற்கொண்டு விரிவுபடுத்திக் கொள்வதற்கான தெளிவான இலக்குகளையும் இச் சந்திப்பின் போது இரு தரப்பினரும் நிர்ணயித்துள்ளனர்.

அததுடன் இச் சந்திப்பின் போது சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது. மோதலுடன் தொடர்புடைய இரு தரப்பினரையும் தாமதிக்காமல் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமென ஆணைக்குழு கேட்டுக் கொண்டது.

நேறறைய சந்திப்பின்போது 2001 ஆம் ஆண்டில் இறுதியாக இடம் பெற்ற கூட்டத்திற்குப் பின்னர் ஐரோப்பிய ஆணைக்குழுவிற்கும் இலங்கைக்கும் இடையிலான கூட்டுறவின் முன்னேற்றம் குறித்தும் ஆராயப் பட்டது. (த-8)

## பரிசளிப்பு விழா

(வேலணை)

சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலய கல்லூரித் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் பொ.அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந நிகழ்விற்கு வடக்கு- கிழக்கு மாகாணப் பிரதிப் பிரதம நிதி செயலாளரும் புனர்வாழ்வுப்பகுதி மேலதிக செயலாளரும், நீர்ப் வேலைத் திட்ட இணைப்பாளருமான க.மகாலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ப-47)

## விவாத அரங்கு - 6

விடயம்

மதுமாற்றத் தடைச் சட்டம்
தேவையானதா?
தேவையற்றதா?

நடுவர் : விதுரன்

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்

*அனுப்பவேண்டிய முகவரி*

விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# வலி.கிழக்கு பிரதேசசபை, நீர்வேலி

## 2005ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 05.11.2004 முதல் 12.11.2004 வரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி:- 16.11.2004 ஆந் திகதி 12.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி:- 16.11.2004 பி.ப. 2.00 மணிக்கு

கேள்விப் பத்திரங்களை அந்தந்த உப- அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்

| இல குத்தகை விபரம் | கேள்விப் பத்திரப் பணம் (வற்வரிநீங்கலாக) | கேள்வி வைப்பு | ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வற்வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| **அச்சுவேலி உப-அலுவலகம்** | | | |
| 01. அச்சுவேலி பொதுச்சந்தை (துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் உட்பட) | 500.00 | 2000.00 | 785000.00 |
| 02. வளலாய் தம்பாலை பொதுச் சந்தை | 100.00 | 250.00 | 3300.00 |
| 03. அச்சுவேலி மாட்டிறைச்சிக் கடை இல. 20 | 500.00 | 2000.00 | 145500.00 |
| 04. அச்சுவேலி மாட்டிறைச்சிக் கடை இல. 21 | 500.00 | 2000.00 | 145500.00 |
| 05. அசசுவேலி ஆட்டிறைச்சிக கடை | 250.00 | 500.00 | 30000.00 |
| 06. அச்சுவேலி சந்தை சுற்றாடல் வாகனத் தரிப்பு நிலையம் | 250.00 | 500.00 | 35000.00 |
| **கோப்பாய் உப-அலுவலகம்** | | | |
| 01. கோப்பாய் வடக்கு பொதுச்சந்தை | 200.00 | 500.00 | 10000.00 |
| 02. இருபாலை பொதுச்சந்தை | 200.00 | 500.00 | 10000.00 |
| 03. கோப்பாய் வடக்கு மாட்டிறைச் சிக்கடை | 250.00 | 500.00 | 46000.00 |
| 04. இருபாலை சந்தி மாட்டிறைச் சிக்கடை | 500.00 | 2000.00 | 96000.00 |
| 05. இருபாலை ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 250.00 | 2000.00 |
| 06. கோப்பாய் வடக்கு ஆட்டிறைச் சிக்கடை | 100.00 | 250.00 | 2000.00 |
| **உரும்பிராய் உப-அலுவலகம்** | | | |
| 01. உரும்பிராய் மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 115000.00 |
| 02. ஊரெழு மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 16500.00 |
| 03. உரும்பிராய் ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 60000.00 |
| 04. ஊரெழு ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 10000.00 |
| 05. உரும்பிராய் மத்திய சந்தை | 250.00 | 500.00 | 40000.00 |
| 06. ஊரெழு சந்தை | 50.00 | 100.00 | 1000.00 |
| 07. உரும்பிராய் மேற்கு அன்னங்கை மீன்சந்தை | 50.00 | 100.00 | 1000.00 |
| **புத்தூர் உப-அலுவலகம்** | | | |
| 01. புத்தூர் சந்தை மாட்டிறைச் சிக்கடை | 500.00 | 2000.00 | 86500.00 |
| 02. புத்தூர் பொதுச்சந்தை | 250.00 | 500.00 | 19000.00 |
| 03. வாதரவத்தை மாட்டிறைச்சிக்கடை | 100.00 | 250.00 | 3500.00 |
| 04. புத்தூர் மத்திய சந்தை ஆட்டி றைச்சிக்கடை | 250.00 | 500.00 | 6000.00 |
| 05. ஆவரங்கால் பொதுச்சந்தை | 100.00 | 250.00 | 3000.00 |
| **நீர்வேலி உப-அலுவலகம்** | | | |
| 01. நீர்வேலி மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 16800.00 |
| 02. நீர்வேலி ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 5000.00 |
| 03. நீர்வேலி மீன் சந்தை | 100.00 | 250.00 | 3500.00 |
| 04. நீர்வேலி பொதுச்சந்தை | 50.00 | 100.00 | 1500.00 |

*குறிப்பு:-*

01. சந்தையிலிருந்து 01 கி.மீற்றர் சுற்றாடலில் மீன், மரக்கறி விற்பது தடைசெய்யப்பட்டுள்ளது. அதை மீறி விற்பனை செய்பவர்கள் மீது வரி அறவிட சந்தை குத்தகைக்காரருக்கு அதிகாரம் உண்டு.

02. ஊரெழு ஆட்டிறைச்சிக்கடை, அன்னங்கை மீன் சந்தைக்கும், கோப்பாய் வடக்கு மீன் சந்தைக்கும் கேள்வி கோரி விண்ணப்பிப்பவர்கள் தாமாகவே கட்டடம் அமைத்தல் வேண்டும்.

03. கேள்விப்பத்திரங்களைப் பெற விரும்புவோர் தத்தமது பிரதேச கிராமசேவையாளரின் வதிவிடச் சான்றிதழ், கிராம சேவை உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டை பிரதியுடன் உப- அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

04. கேள்விப்பத்திரப் பணம், சித்தி பெற்ற கேள்வித்தொகை என்பவற்றிற்கு ஒப்பந்தம் எழுதும் போதுள்ளபடி வற்வரி செலுத்துதல் வேண்டும்.

வலி.கிழக்கு பிரதேசசபை,
தலைமை அலுவலகம்,
நீர்வேலி.
29. 10. 2004

இ.இராஜதுரை,
செயலாளர்.

(C/666)


## அயர்லாந்தின் எஸ்.எல்.ரி கட்சியினருடன் சு.ப.தமிழ்ச்செல்வன் சந்தித்துப் பேச்சு

(அயர்லாந்து)

அயர்லாந்துக்கு விஜயம் செய்திருந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் மீண்டும் சுவிஸ் நாட்டுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

அயர்லாந்து சென்றிருந்த இவர்கள், அயர்லாந்தின் எஸ்.எல்.ரி. கட்சியின் தலைவரை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர்.

இச்சந்திப்பின் போது, தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக தமிழ்ச்செல்வன் விளக்கமளித்துள்ளார்.

வடக்கு - கிழக்கின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக தம்மால் தயாரிக்கப்பட்டு, அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையின் அவசியம் தொடர்பான விளக்கத்தினையும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

கடந்த இரண்டரை ஆண்டுகளாகக் கடைப்பிடிக்கப்பட்டுவரும் யுத்த நிறுத்தம் அமுலில் உள்ள நிலையில், இருதரப்பினருக்கும் இடையில் நம்பிக்கையினை ஏற்படுத்தவும், மனிதாபிமான ரீதியான உதவிகளை வழங்கவும் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையின் அமுலாக்கல் அவசியமானதென்றாகும்.

ஆட்சிபீடம் ஏறும் ஒவ்வொரு அரசாங்கமும் வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து பல்வேறு வாக்குறுதிகளை வழங்கிய போதும் அவை இன்னும் நிறைவேற்றப்படவில்லை எனவும் சு.ப.தமிழ்ச் செல்வன் சுட்டிக்காட்டினார்.

அவர்களின் இந் நடவடிக்கைகளினால் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வுகாண்பது தொடர்பாக தமிழ் மக்கள் மிக எச்சரிக்கையாகவும், அவதானமாகவும் இருக்கின்றார்கள்.

தற்போதுள்ள அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தையினை ஆரம்பித்தால், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பன அரசாங்கத்திற்குப் பூரண ஆதரவினை வழங்கத் தயாராக விருப்பதாகவும் இச் சந்திப்பின் போது சு.ப.தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டினார். (ந-121)

## இரண்டாம் நிலைக் கல்வி அபிவிருத்திக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி

(கொழும்பு)

இரண்டாம் நிலைக் கல்வியின் தரத்தினை உயர்த்தும் திட்டத்திற்காக 35 மில்லியன் டொலர்களை மானியமாக வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளது.

இலங்கையின் இரண்டாம் நிலைக் கல்வியில் காணப்படும் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்து, அதன் கல்வித் தரத்தினை சர்வதேசத் தரத்திற்கு உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கம் என ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

சுமார் ஆயிரம் பாடசாலைகளின் தரத்தினை உயர்த்துதல், கற்பித்தலுக்கான வசதிகளை வழங்குதல் மற்றும் ஆசிரியர்களின் தரத்தினை உயர்த்துதல் என்பன இத்திட்டத்தின் பிரதானமான நோக்கங்களாகும்.

ஏனைய ஆசிய நாடுகள் தமது கல்வி வளர்ச்சிக்காகச் செலவிடுவது சராசரி 3.5 வீதமாகும். அவற்றுடன் ஒப்பிடும் போது இலங்கை தனது தேசிய உற்பத்தியில் 2.8 வீதத்தினை கல்விக்காகச் செலவிடுகின்றது எனவும் ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

அதேசமயம், 14 முதல் 26வயதிற்கு இடைப்பட்டோரில் 70 சத வீதமானோர் வேலையற்றோராகக் காணப்படுவதற்கு இலங்கையின் கல்வி முறை தொழில் சார்ந்த ஒன்றாக இல்லாமையே காரணமாகும்.

இலங்கையின் கல்வி அபிவிருத்தித் திட்டத்திற்கென 47 மில்லியன் டொலரை ஆசிய அபிவிருத்தி வங்கி ஒதுக்கியுள்ள நிலையில், 10.3 மில்லியன் டொலர் செலவினை இலங்கை அரசு ஏற்றுள்ளது. (ந-121)

## விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தினால் நடாத்தப்படும் உயர் தேசிய டிப்ளோமா பாடநெறிகளுக்காக, கல்விப் பொது தராதர உயர் தரப்பரீட்சையை 2004 ஆண்டு அல்லது அதற்கு முன்னர் வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ள தகுதி பெற்ற விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் "பணிப்பாளர் நாயகம், இலங்கை உயர் தொழில் நுட்ப கல்வி நிறுவனம், இல 18/2 வாட்இடம் கொழும்பு - 07 என்ற முகவரிக்கு 19.11.2004 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை 29.10.2004 ஆம் திகதி வெளியான அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (க)

★ ★ ★

(கொழும்பு)

வர்த்தக, வாணிப நுகர்வோர் விவகார அமைச்சின் கிழ்வரும் வர்த்தக திணைக்களத்தில் " உதவி வர்த்தகப் பணிப்பாளர்" பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பொருளியல் வர்த்தகம், தொழில் அல்லது, பொது நிர்வாகம் ஆகியவற்றில் முதலாம் வகுப்பு, இரண்டாம் வகுப்பு பட்டம் பெற்றவராக இருக்கவேண்டும்.

தகுதியுடையோர் தமது விண்ணப்பப்படிவங்களை "செயலாளர் வர்த்தக, வாணிப நுகர்வோர் விவகார அமைச்சு, 21, வொக்ஷோல் வீதி அஞ்சல் பெட்டி 560, கொழும்பு 2 என்ற முகவரிக்கு 29.11.2004 அல்லது அதற்கு முன்னதாக அனுப்பிவைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## அடுத்தவாரம் அரிசியின் விலை குறையும்?

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட, மேலும் 25 இலட்சம் கிலோ அரிசி அடுத்த வாரம் 8 மாவட்டங்களில் விற்பனைக்காக விடப்படவுள்ளது.

இதன் மூலம் அரிசியின் விலை நூற்றுக்கு 35 வீதமாகக் குறையும் என வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

ஏற்கனவே 25 இலட்சம் கிலோ அரிசி கூட்டுறவு நிலையங்களினூடாக விற்பனைக்கு விடப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக மேலும் 25 இலட்சம் கிலோ அரிசி நாடளாவிய ரீதியில் விற்பனைக்கு விடப்படவுள்ளதுடன், நாட்டின் சகல பிரதேசங்களிலும் குறைந்த விலையில் அரிசியினை விற்பனை செய்வது உறுதி செய்யப்படும் என்றும் அமைச்சர் மேலும் கூறினார். (க-10)

எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின். - குறள்

வலம்புரி

# கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் யோகம்

ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்து ஆட்சியமைத்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இப்போது ஜே.வி. பியின் சுய ரூபத்தை மெல்ல உணரத்தொடங்கி யுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சியிலிருந்து நீக்கி, தனது கட்சியை ஆட்சிப்பீடம் ஏற்றுவதற்காக ஜே. வி.பியுடன் கூட்டுச்சேர்ந்தவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

தனது கணவர் காலஞ்சென்ற விஜயகுமாரதுங் கவை ஜே.வி.பியினரே கொலை செய்தார்கள் என்ற செய்திகளின் மத்தியிலும் ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்தார்.

தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு விடு தலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சை முன்னெ டுப்பதற்கு முழுமையான எதிர்ப்பைக் காட்டிய ஜே. வி.பியுடன் சந்திரிகா குமாரதுங்க கூட்டுச்சேர்ந்தார் எனின், அவரின் சமாதான விருப்பு எத்தகையது என் பதை மக்கள் உணர்ந்துகொள்வர்.

சமாதானத்தை ஏற்படுத்த முனைவதுபோலவும் அதற்காக விடுதலைப் புலிகளுடன் பேச்சை ஆரம் பிக்கவுள்ளதாகவும் காட்டிக்கொள்ளும் ஜனாதிப திக்கு சமாதானத்தை எதிர்க்கும் ஜே.வி.பி. பற்றி எந்தக் கவலையுமே இருக்கவில்லை.

ஜே.வி.பியை அடக்குவது எப்படி என்பது தனக் குத் தெரியும் எனக்கூறிய அவர், இப்போது திகில டைந்து போயுள்ளார். அதற்குக் காரணம் அவர் உருவாக்கிய சமாதான முயற்சியை ஜே.வி.பி. சீர் குலைத்துவிட்டதென்பதல்ல.

மாறாக ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீர வன்ச தன்னைப்பற்றி, தனது அங்கம்பற்றி, விரும்பத் தகாதவாறு உரையாற்றிவிட்டார் என்பதே ஜனாதி பதியின் திகிலுக்கான காரணம் ஆகும்.

நாட்டின் சமாதான முயற்சியை அறவே எதிர்த்த ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்த ஜனாதிபதிக்கு ஜே.வி.பியின் சமாதான எதிர்ப்பு ஆத்திரம் எதனையும் ஏற்படுத்தவில்லை. மாறாக தனது உடலமைப்புக் குறித்து விமல் வீரவன்ச தெரிவித்த விடயமே அவரை நோகடிக்க வைத்துள்ளது.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக் களை முன்னெடுத்த ரணில் விக்கிரமசிங்க தலை மையிலான ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சி யைக் கலைத்த ஜனாதிபதி, கலைப்பிற்கான கார ணத்தில் அரசும் - விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் நாட்டைப் பிளவுபடுத்துவதாக குற்றஞ்சாட்டியிருந்தார்.

பின்னர் பொதுத் தேர்தலில் எப்பாடுபட்டும் சமா தானத்தை எட்டுவேன் எனவும் பிரசாரம் செய்தார். சமாதானத்தை எதிர்க்கும் ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்துகொண்டு சமாதானத்தை ஏற்படுத்துவேன் எனக்கூறிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நம்பி நாட்டுமக்களும் தங்களின் வாக்குக்களை வழங்கினர்.

புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் நாட்டில் யுத் தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து மனித உயிர்க ளைக் காப்பாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியை மறந்து போன சிங்கள மக்கள் சந்திரிகா குமாரதுங்கவை யும், ஜே.வி.பியையும் நம்பினர். எனினும் இப்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் பிளவு ஏற் பட்டுவிட்டது.

ஜனாதிபதியை விமர்சிக்கும் அளவுக்கு ஜே.வி. பியின் அரசியல் நடவடிக்கைகள் அமைந்துவிட்டமை சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச்சேர்வதன் மூலம் தனது அரசியல் பலத்தை நிலைநாட்டுவதற்கு வகுத்த இராஜதந்திரத்தில் ஜே.வி.பி. வெற்றிபெற்று விட்டது. அதன் காரணமாக ஜே.வி.பி. அரசைத் தூக்கியெறிவதற்கும் துணிந்துவிட்டது.

இவ்விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் உத வியைப் பெற்று தனது பலத்தை - சமாதானத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளிபடுத்த வேண்டும்.

விடுதலைப் புலிகளுடன் நடத்தப்பட்ட சமாதானப் பேச்சுக்களின் அடிப்படையில் இடைக்கால சபைத் திட்டவரைபிலிருந்து பேச்சுக்களை ஆரம்பிப்பதாயின் தமது ஆதரவை ஜனாதிபதிக்கு வழங்கமுடியும் என்ற ஐக்கிய தேசியக் கட்சியின் அறிவிப்பை ஜனா திபதி சந்திரிகா இவ்விடயத்தில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

கெட்டவன் கெட்டிடின் கிட்டிடும் யோகம் என் பதை நினைவிற்கொண்டு ஜே.வி.பியைத் தூக்கி யெறிய ஜனாதிபதி முன்வரவேண்டும்.

# ஐ.தே.க.-ஸ்ரீ.சு.க. இணைந்து செயற்பட்டால் அன்றி இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது சாத்தியமற்றது

## புளொட் இயக்கத் தலைவர் சித்தார்த்தன்

(கொழும்பு)

**இலங்கையின் இரு பிரதான அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் கூட்டுச் சேர்ந்து செயற்படாமல் இரு தசாப்த கால இனப்பிரச்சினைக்கு ஒரு போதும் தீர்வொன்றினைக் காணமுடியாது.**

இவ்வாறு புளொட் இயக்கத் தலைவரும், முன்னாள் பாரா ளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் சுட்டிக் காட்டியுள்ளார்.

தென்னிலங்கை ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியி லேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில், ஜனாதிபதி தேர்தலை நடாத்தி நிறைவேற்று அதிகாரத்தைக கைப்பற்ற வேண்டும என்பதில் ரணில் விக்கிரமசிங்கவும் அர சியல் அமைப்பை மாற்றி பிரதம மந்திரி ஆட்சி முறையைக் கொண்டு வரவேண்டும் என்பதில் ஜனாதிபதியும் அக்கறை செலுத்தி வருகின்றனர்.

ஆனால், இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகத் தெரியவில்லை. இடைநிறுத்தப்பட்டுள்ள சமா தானப் பேச்சுவார்த்தைகள் தற்போது ஆரம்பிக்கக் கூடிய சூழ்நிலை எதுவும் தற்போது தென்படவில்லை.

தென்னிலங்கையின் பிரதான இரு அரசியல் கட்சிகளி டையே அதிகாரத்தைக் கைப்பற்றும் போட்டிகள்தான் தற் போது அதிகரித்து வருகின்றன.

ஐக்கியதேசியக் கூட்டமைப்பும், ஐக்கிய மக்கள் சுதந்தி ரக் கூட்டமைப்பும் மாறி மாறி ஒருவருக்கொருவர் குற்றச்சாட்டு களை முன்வைக்கின்றன.

ஜனாதிபதி தேர்தலை நடாத்தி நிறைவேற்று ஜனாதிபதி அதிகாரத்தைக் கைப்பற்றி விடவேண்டும் என்பதில் ஐக்கிய தேசியக் கட்சி குறியாக இருக்கிறது.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அர சாங்கத்துக்குள் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார் என்ற போட்டி நிலவுகின்றது. ஆனால் ஜனாதிபதி சர்வஜன வாக் கெடுப்பை நடாத்தி பிரதமர் ஆட்சி முறையைக் கொண்டு வரு வதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்.

இந்த முயற்சிகளில் எது வெற்றியளித்தாலும் அதற்கப் பால் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் இழுத்தடிக் கப்படுமென்பதில் சந்தேகம் இல்லை.

சமாதான முயற்சிகளைப் பொறுத்தவரை முழுமையான கவனம் செலுத்தப்படுவதில்லை.

இந் நிலையில் தேசிய ஆலோசனைச் சபைக் கூட்டத்தை நடாத்துவதும், சகல அரசியல் கட்சிகளிடமும் ஆலோசனை பெறுவதும் போன்ற முயற்சிகள் எல்லாமே வெறுமனே காலத் தைக் கடத்தும் செயற்பாடுகளாகும்.

அவை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் இல்லை. தூர நோக்கற்ற இவ்வாறான செயற்பாடுகளினால் நாடு சகல வழி களிலும் பின்னடைவை நோக்கிச் செல்கிறது. நாட்டின் எதிர் கால மோசமான, ஆபத்தான நிலைமைகளைச் சகல தரப்பி னரும் உணர்ந்து செயற்படவேண்டும் எனவும் தெரிவித்தார்.

(ந-121)

# அரசாங்கத்தின் செயற்பாடுகளால் அனைத்துத் துறைகளிலும் பாதிப்பு

(கொழும்பு)

பல்வேறுபட்ட துறைகளும் அரசின் செயற்பாடுகளால் தற்போது செயற்றிறன் அற்றுக் காணப்படுவதாக விவசாய அமைச்சர் அனுரகுமார திஸநாயக்க கூறியுள்ளார்.

மாததறையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

நிதிநெருக்கடி காரணமாக அத்தியாவசியப் பொருட்க ளின் விலைகள் மேலும் அதிகரிக்கப்படவுள்ளன.

நாட்டின் அந்நியச் செலாவணி வருமானம் வீழ்ச்சி கண்டுள்ள தினால், தற்போது கையிருப்பில் உள்ள நிதி 9மாதங்களுக்கே போதுமானதாக உள்ளது.

மத்தியவங்கி கையிருப்பில் இந்த நிதியை புழக்கத் தில் விட்டால் நாட்டின் நிதி நிலைமை மேலும் மோசமடை யும். நாட்டில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடிகளுக்கு உலக சந்தையில் எண்ணெய் விலையில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும்.

உண்மை நிலையைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டி யது அனைவரதும் கடமையாகும் எனவும் அவர் மேலும் கூறினார்.

(ந-8)

## சேது சமுத்திரத் திட்டம் குறித்த சர்ச்சை

# நெதர்லாந்திலுள்ள சர்வதேச நீதிமன்றுக்கு கொண்டு செல்லப்படுமென எச்சரிக்கை!

(கொழும்பு)

சேது சமுத்திரத் திட்டம் தொடர்பான சர்ச்சையை நெதர் லாந்தில் உள்ள சர்வதேச நீதிமன்றத்தின் முன் கொண்டு செல்லப் போவதாக இலங்கையின் சுற்றுப்புறச் சூழல் பாது காப்பு அமைப்பு ஒன்று எச்சரித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் இது விடயம் குறித்து எடுத்து வரும் முயற்சிகள் தோல்வி அடையும் படசத்தில் தாம் இவ்வாறு செயற்படப் போவதாக அமைப்பின் பேச்சாளர் விகராத் குண சிங்க தெரிவித்துள்ளார்.

தாம் ஏற்கனவே இதற்கென அமைக்கப்பட்ட சர்வதேசக் கூட்டுக் குழுவிடம் தமது அறிக்கையை சமர்ப்பித்துள்ளதா கவும், அக்குழுவின் கருத்துக்களுக்காகக் காத்திருப்பதாக வும் அவர் தெரிவித்தார்.

சேது சமுத்திரக் கப்பல் கால்வாய் வேலைகள் தொடங் கப்படுவதற்கு முன்னர் இந்தியாவினதும் இலங்கையினதும் சூழல் பாதுகாப்பு நிறுவனங்கள் கூட்டாக இதுபற்றி ஆராய்ந்து மதிப்பீடொன்றை செய்தல் வேண்டும் என்று மேறபடி சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு அமைப்பு சர்வதேசக் குழுவிட ம் சமர்ப்பித்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இத்திட்டத்தினால் வங்காளவிரிகுடாவிலிருந்து அதிகள வான நீர் உள்வரும் சாத்தியப்பாடு உள்ளதால் மன்னார் குடாவின நீர்மட்டத்தில மாற்றம் ஏற்பட்டு சமநிலை பாதிக்கப் படும் என்று நாறா தேசிய நீரியல் ஆய்வு அதிகார சபையின் அறிக்கையொன்றிலும் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பி தக்கது.

(ந-6)

# இலங்கை-இந்தியாவுக்கு இடையிலான உறவுகள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும்

## இந்திய உயர்ஸ்தானிகர் நிருபமா ராவ்

(கொழும்பு)

இலங்கை - இந்தியாவுக்கிடையில் விரிவான பொருளா தார ஒத்துழைப்பைக் கட்டியெழுப்புவதற்காக இந்திய அரசாங் கம் நடவடிக்கை எடுத்து வருவதாக இலங்கைக்கான இந் திய உயர்ஸ்தானிகர் நிருபமா ராவ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்திய பொருளாதார செயற்றிட்டத்தின் வருடாந்த வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 2002 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் படி இரு நாடுகளுக்குமிடையிலான தொழில நுட்ப ஒத்துழைப்பு முன்னேற்றம் அடைந்து வருகின்றது.

இரு நாடுகளுக்கும் இடையிலான முதலீட்டு வாய்ப்புகளை அதிகரிப்பதற்குப் பொருளாதார ஒத்துழைப்பு மிகவும் வளர்ச் சியடைய வேண்டும். பொருளாதார மற்றும் வர்த்தக நடவடிக்கை களை மேம்படுத்தக் கூடிய பல வழிவகைகள் உள்ளன.

உண்மையில் இரு நாடுகளுக்குமிடையில் ஒத்துழைப்பைக் கட்டியெழுப்புவதற்காக இலங்கை - இந்திய அரசுகள் ஆர்வமாக உள்ளன.

அத்துடன், நாடுகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல் கள் மாத்திரமன்றி இரு நாட்டு வர்த்தகர்களும் இலங்கைக்கும்- இந்தியாவுக்கும் சென்று முதலீடுகளை மேற்கொள்ள வேண் டும் எனவும் நிருபமா ராவ் மேலும் தெரிவித்துள்ளார். (ந-8)

## தினசரி தியானம்

# விவேகச் சிந்தனைகள்

**ஒரு பசு பொய் சொன்னதாகவோ, ஒரு மரம் திருடியதாகவோ நீங்கள் கேள்விப்பட்டது உண்டா? அவை பரிபூரணமான எந்திரங்கள். அவை தவறுகள் செய்வதில்லை. எல்லாம் முடிந்து விட்டதோர் உலகில் அவை வாழ் கினறன. இது செயல்முறை மதம இல்லை என் றால் மதத்தின் லட்சியம் தான் என்ன? அப் படி ஒன்றும் இருக்க முடியாது.**

சுவாமி விவேகானந்தர்

## அனுமதியின்றி சாராயம் விற்றவர்கள் பொலிஸாரால் கைது

(கல்வியங்காடு)

அனுமதிப் பத்திரமின்றி சாராயம் விற்றார் என்ற குற்றச்சாட்டிலே இருவர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த புதன்கிழமை கல்வியங்காட்டுப்பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்ட இவ்விருவரும் பொதுமக்கள் கொடுத்த தகவல்களின் அடிப்படையிலேயே கைது செய்யப்பட்டுள்ளனர். (ப-74)

## பிரதியமைச்சர்...

இதன்போது அவர்கள் பாதுகாப்பு பிரிவினரை அச்சுறுத்திச் சென்றுள்ளனர். இதனையடுத்து ப்பாதுகாப்பு பிரிவினர் பொலிஸில் முறையிட்டுள்ளனர்.

இதனைத்தொடர்ந்து சனியிரவு மேவின் சில்வாவும் ஆயுதம் தாங்கிய 50 பேரும் கிளப்பினுள் புகுந்து தாக்குதல் நடத்தியதுடன் பல பெறுமதியான வெளிநாட்டு மதுபான வகைகளையும் எடுத்துச்சென்றுள்ளனர். (ச-6)

# சந்தர்ப்பத்தை சாதகமாகப் பயன்படுத்தி சமாதான பேச்சுக்களை நகர்த்தவேண்டும்

## அரசசார்பற்ற நிறுவனங்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை

தமிழீழ விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் வரவு அடிப்படையில் பேச்சுவார்த்தையை மீளவும் ஆரம்பிப்பதற்கு ஐக்கிய தேசியக்கட்சி எத்தகைய நிபந்தனைகளும் இன்றி அதன் ஆதரவைத் தெரிவித்துள்ளது. எனவே ஜனாதிபதி இச் சந்திப்பை உரியவகையில் பயன்படுத்தி நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த உரிய நடவடிக்கையை எடுக்கவேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் வெளியிட்டுள்ள செப்டம்பர் மாதத்திற்கான அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இணையத்தின் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள இவ் அறிக்கையின் பிரதிகள் இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் அரச தரப்பினருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்த நிலைபர அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, இடைநிறுத்தப்பட்ட நிலையிலுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம் பிப்பதற்கான பொறுப்பு ஜனாதிபதி வசமே உள்ளது. எனவே முழுநாட்டின் நன்மையைக் கருத் தில்கொண்டு நாட்டிற்கு உகந்த தான ஒரு தீர்வை ஜனாதிபதி கொண்டு வரவேண்டும்.

எனவே யுத்தத்தின் அனர்த்தங்கள் காரணமாக நொந்து போயுள்ள யாழ்ப்பாணத்து மக்களுக்கு மேலும் சுமைகளை ஏற்படுத்துவதுபோல இப்போது வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு செல்கிறது. இதனால் யாழ்ப்பாணத்து மக்கள் பெரும் துன்பங்களையும் கஷ்டங்களையும் அன்றாடம் அனுபவித்து வருகின்றனர்.

### புனர்வாழ்வு

வலிகாமம் வடக்கைச் சேர்ந்த மீனவர்கள் தத்தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தவும், தமக்கான நிவாரணப் பொருட்களைத் தொடர்ந்து வழங்க உடனடி நடவடிக்கை எடுக்கும்படிகோரி யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு மகஜர் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளனர் இடம்பெயர்ந்த நிலையில் கடந்த 14 ஆண்டுகளாக வாழ்ந்துவரும் மீனவக் குடும்பங்களுக்கு அவர்களுக்கான நஷ்டஈடு இன்னமும் வழங்கப்படவில்லை. அத்துடன் இந்திய மீனவர்களின் றோலர்க்ள் அத்துமீறி வடபிரதேச கடலில் நுழைவதால் மீனவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி உள்ளனர்.

### போக்குவரத்து

தீவுப்பகுதிகளுக்கான வீதிகள் யுத்தம் ஆரம்பமானது முதல் இதுவரை திருத்தப்படவோ அல்லது புனரமைக்கப்பட்வோ இல்லை. அதனால் இங்குள்ள வீதிகளில் பொதுமக்கள் பயணிப்பதற்கு பெரும் கஷ்டப்பட்டு வருகிறனர்.

இதேவேளை தீவுப்பகுதிக்கான வீதிகளைப் புனரமைப்புச் செய்வ தற்கு ஒப்பந்தக்காரர்கள் எவரும் பாதுகாப்பு காரணங்கள் நிமிர்த்தம் முன்வராமல் இருக்கின்றனர்.

### கல்வி

யாழ்ப்பாணத்தில் இருக்கும் மாணவர்களும் ஏனையவர்களும் தமது அலுவலகங்களுக்கு வெளிநாட்டு நிதியில் மட்டும் தங்கியிருக்கும் மனோபாவத்தை மாற்றிக் கொள்ளவேண்டும் என யாழ்ப்பாணம் தொழில்நுட்பக்கல்லூரிக்கு வந்திருந்த யப்பானிய தூதுவராலய அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார்.

இவர்கள் யாவரும் தமது சொந்த வளங்களிலும் திறமைகளிலுமே தங்கியிருக்க முனையவேண்டும் என்று குறிப்பிடப்பட்டது. உலக மகாயுத்தத்தின் அழிவின் பின்னர் யப்பான் இவ்வகையிலேயே முன்னேற்றம் கண்டது என்றும் தூதுவராலய அதிகாரி குறிப்பிட்டார்.

### பாதுகாப்பு

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவது குறித்து விசாரிப்பதற்கு சென்ற யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் பொலிஸாரால் தாக்கப்பட்டனர். இத்தகைய நடவடிக்கையை அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் கண்டனம் செய்து ஜனாதிபதிக்கு அவசர கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது.

மேலும் இந்நிலைபர அறிக்கையில் விவசாயம், விளையாட்டு ,மனித நேயஉதவிகள் சட்டமும் ஒழுங்கும்,மிதிவெடிகள், கலாசார விடயங்கள்குறித்தும் சுட்டிக்காட்டப் படடுள்ளன. (ப-16)

# பரீட்சைக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றன

(கொழும்பு)

இலங்கை வெளிநாட்டுச் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

எதிர்வரும் ஜனவரி மாதம் கொழும்பில் நடாத்தப்படவுள்ள இந்தப் பரீட்சைக்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றவர் தோற்றலாம்.

ஆத்துடன், விண்ணப்பதாரி 30 வயதுக்கு மேறபடாதவராக இருக்கவேண்டும். ஏற்கனவே அரச சேவையில் உள்ளவர்கள் 40 வயதுக்கு மேறபடாதவராக இருக்கவேண்டும்.

வண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்து அண்மையில் உள்ள மாவட்ட செயலகத்தில் அல்லது கொழும்பில் உள்ள திறைசேரியில் பரீட்சைக் கட்டணம் 300 ரூபாவைச் செலுத்தி பணம் செலுத்திய பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து " பரீட்சை ஆணையாளர், நாயகம், பரீட்சைத்திணைக்களம், (அமைப்பு வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவு) பெலவத்தை, பத்தரமுல்லை'' என்ற முகவரிக்கு 30.11.2004 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. (க)

## மட்டு. காத்தான்குடியில்...

ஜாமியத்துல் உலமா சபையின் கோட்பாடுகளின் அடிப்படையில் மதத்தை பின்பற்றும் ஒருவர் மாற்றுப் பிரிவினரால் கடத்தப்பட்டதாக வெளியான வதந்தி காரணமாகவே நேற்று இந்த வன்முறைகள் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

நூற்றுக்கும் மேறபட்டோர் தடிகள், பொல்லுகள் சகிதம் இந்த வன்முறையில் ஈடுபட்டுள்ளனர். மருதமுனைவாசியொருவரால் நிர்மாணிக்கப்பட்டுவரும் பள்ளிவாசல் சேதமாக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்ட போதிலும் தீ பரவாமல் உடனடியாக அணைக்கப்பட்டது.

அகில இலங்கை இஸ்லாமிய மெஞ்ஞான பேரவையின் 2 மத்ரசாக்கள் முற்றாகத் தீப்பற்றி எரிந்துள்ளன. இந்த சம்பவத்தையடுத்து அப்பிரதேசத்தில் உருவாகியுள்ள பதற்றநிலை காரணமாக அனைத்து பள்ளிவாசல்களுக்கும் விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

கலகம் அடக்கும் பொலிஸார் அப்பிரதேசத்தில் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளதோடு, இராணுவத்தினரும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

காத்தான்குடியில் இடம்பெற்ற சம்பவத்தை அடுத்து ஏற்பட்ட பதற்றத்தை தணிக்கும்முகமாக சமாதானக் குழுக்கூட்டம் ஒன்று நேற்று நடைபெற்றுள்ளது.

காத்தான்குடி பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி ஐ.பி.ஹேரத் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பொலிஸார் மற்றும் சம்பவத்தில் தொடர்புபட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த வன்முறை சம்பவங்களை அடுத்து நேற்றிரவு 7 மணி முதல் இன்று காலை 6 மணி வரை பொலிஸ் ஊரடங்கு அமுலபடுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-08,121)

## தமிழ்...

கள் உள்ளடங்கலாக அனைத்து அரச ஊடக நிறுவனங்களின் தமிழ்-முஸ்லிம் நிகழ்ச்சிகளைக் கண்காணித்தலும் நெறிப்படுத்தலும் ஆகியன உட்பட மற்றும் பல பொறுப்புக்கள் பிரதியமைச்சர் சேகு இஸ்ஸதீனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

## தமிழீழ....

டென்மார்க் நீதிமன்றத்தின் அனுமதியுடனேயே தாம் அந்த சோதனை நடவடிக்கையை மேற்கொண்டதாக டென்மார்க் பொலிஸார் நியாயப்படுத்துகின்றனர்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளுமாறு டென்மார்க் அரசாங்கம் ஐரோப்பிய ஒன்றியத்தை அண்மையில் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-06)

## ஆறுபேரின்....

துரோகிகள் இராணுவத்துடன் இணைந்து மண்ணை நேசிக்கும் மக்களை கோழைத்தனமான முறையில் படுகொலை செய்து வருகின்றார்கள்.

இந்தத் துரோகிகளை இனங்கண்டு பொதுமக்கள் தகவல்களை தந்து உதவவேண்டும் என்றும்,

எஞ்சியிருக்கும் துரோகிகளை இனங்காண்போம் என்ற தலைபபில் அந்த துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-121)

## அமைச்சரவை...

வித்துள்ளார்.

ஜனாதிபதி அமைச்சரவையில் சமர்ப்பித்த அறிக்கையின் பிரதி ஒன்று ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவான ஊடகம் ஒன்றிற்குச் சென்றுள்ளதாகவும், அவ் அறிக்கை எவ்வாறு அங்கு சென்றது என அவர் அக்கடிதத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன் இந்த ஊடகங்களுக்கு குறிப்பிட்ட அமைச்சரவை அறிக்கையை சமர்ப்பித்தமைக்கு ஜனாதிபதியே பொறுப்பேற்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீறும் செயல்கள் தொடர்கின்றமையானது ஆரோக்கியமானதல்ல என அவர் மேலும் தெரிவித்தார். (ச-121)

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிளவுபட ஹக்கீமே காரணம்

## அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தற்போது4குழுவாக பிளவுபட்டிருக் கின்றதாகவும் இத்தகைய பிளவுக்கு காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமின் சீரற்ற தலைமைத்துவமே காரணம் என்று வன்னி மாவட்ட புனர்வாழ்வு அபிவிருத்தி அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு அளித்த விசேட செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

காங்கிரஸின் தலைவராக இருக்கும் ரவூப்ஹக்கீம் தலைமைப் பதவியிலிருந்து எப்போது விலகிக்கொள்கிறாரோ அப்போதுதான் இந்த 4 குழுக்களும் ஒன்றுபட்டு செயறபடும் என்றார்.

இதேவேளை அமைச்சர் நஜீப் ஏ.மஜித் கருத்து தெரிவிக்கையில்,

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தவும் முஸ்லிம்களின் கோரிக்கைகளை வென்றெடுக்கவும் தாம் சகல கட்சிகளுடனும் ஒன்றிணைந்து பணியாற்றப்போவதாகத் தெரிவித்தார்.

இதேவேளை முஸ்லிம் சமூகத்திற்கு சேவையாற்றுவதற்கு ஓர் சந்தர்ப்பம் அளித்ததையிட்டு அமீர் அலி உட்பட 3 அமைச்சர்கள் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்துள்ளார்கள். (க-60)

## ஐக்கிய மக்கள்...

இதனையடுத்து ஜனாதிபதி ஒரு கூட்டணிக்கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சிக்குரிய ஆகக் குறைந்த தகுதிகூட ஜே.வி.பியினருக்கு இல்லை எனத் தெரிவித்தார்.

இவ்வாறு இரு கட்சியும் மாறி மாறி விமர்சிக்கின்ற வேலையையே தற்பொழுது மேற்கொண்டுவருகின்றன. தமது கருத்து வேறுபாடுகள் முற்றியநிலையில் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு தமது கட்சிப் பிரதிநிதியை அனுப்புவதற்கு தீர்மானித்துள்ளது. இது தொடர்பாக கடந்த திங்கட்கிழமை தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஜனாதிபதி மீறிவிட்டார் என்று ஜே.வி.பி குற்றம்சாட்டியுள்ளது.

ஜனாதிபதி சுதந்திர கூட்டமைப்பின் பதவியில் இருந்து இராஜினாமா செய்ததில்கூட இரு கட்சிகளுக்குமிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயலாகும் என்று ஜே.வி.பி குற்றஞ்சாட்டியுள்ளது.

இவ்வாறான நிலையில் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து தனிக் கட்சியாக பிரிந்து பாராளுமன்ற நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக ஜே.வி.பி கூறியுள்ளது. இதனால் பாராளுமன்றப் பெரும்பான்மையை இழக்கப்பட்டு திடீர் தேர்தல் ஒன்று ஏற்படும் என கூறப்படுகிறது. (ச)


தீபாவளி மலிவு விற்பனை

வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கிணங்க

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு

மாபெரும் மலிவு விற்பனை

(28.10.2004தொடக்கம் 11.11.2004 வரை )

சகலவிதமான உடுபுடவைகள் மற்றும் ரெடிமேட் உடுப்புக்களையும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

லைடன் புடவை நிலையம்

இல.410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

T.P- 021 2222381

(C-664)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.11.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.